விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 21 திங்கட்கிழமை (06.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 199

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# வழங்கவும் மாட்டேன் வளையவும் மாட்டேன்

## மகிந்தவுக்கு இடமில்லை; மைத்திரி பளிச்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பிலிருந்து வேட்புமனு வழங் கப்படமாட்டாது என தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன, நாட்டு மக்கள் எதிர்பார்க் கின்ற நல்லாட்சியை குழப்புகின்ற வகையில் செயற்படும் எவருக் கும் தமது கட்சி வேட்புமனுவை வழங்காது எனத் தெரிவித்துள் ளார். (23ஆம் பக்கம் பார்க்க)





யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தினுள் 28-வது கரும்புலிகள் நாள் நினைவு தினம் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டிருந்த மையை படத்தில் காணலாம்.

## மகிந்தவுக்கு வேட்புரிமை

# மைத்திரி - சந்திரிகா நேற்று திடீர் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கும் முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும் இடையில் கொழும்பில் நேற்று சந்திப்பொன்று நடைபெற்றுள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பில் இருவர் தவிர வேறு எவரும் கலந்து கொள்ள வில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப் பட்டமை பற்றி இவர்கள் பேசியிருக் கலாம் என தகவல்கள் கூறுகின் றன.

இதேவேளை முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராக எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவராக இருந் தால் தாமும் அவரை எதிர்த்து தேர்த லில் போட்டியிடப் போவதாக முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

## மைத்திரிக்கு நான் எதிரியில்லை - மகிந்த

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் தனக்கும் சிறந்த உறவு நிலை காணப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந் திய ஊடகம் ஒன்றிற்கு வழங் கியுள்ள நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது இந்திய ஊடகத்திற்கு கருத்து தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தேர் தலில் அரசியல்வாதிகள் ஒரு வரை ஒருவர் எதிர்த்துப் போட்டியிடுவத னால், 23ஆம் பக்கம் பார்க்க....

## கிராமசேவகர்கள் 11 பேர் புனர்வாழ்வு பயிற்சியில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் கிராம மட்டத்திலான அரச நிர்வாகத் திற்குப் பொறுப்பான கிராம சேவை அதிகாரிகள் 11 பேரை இராணு வத்தினரின் புனர்வாழ்வு முகா மின் பயிற்சிக்காக அதிகாரிகள் அனுப்பியிருக்கின்றனர்.

இவர்களுக்கு வவுனியா பூந் தோட்டத்தில் அமைந்துள்ள புனர் வாழ்வு முகாமில், கடந்த வாரம் முதல் புனர்வாழ்வுப் பயிற்சி அளிக்கப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படு கின்றது. இவர்களில் இளம் தாய் ஒருவர் உட்பட பெண்களும் அடங்கு வார்கள் என கூறப்படுகின்றது.

நான்கு வருடங்கள் வரையில் பணியில் இருந்த இவர்கள் தொடர் பான பாதுகாப்பு அறிக்கைக்காகவே இவர்கள் புனர்வாழ்வுக்கு அனுப் பப்பட்டி 24ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன - ராஜித

### வேட்பாளராக மட்டுமே போட்டியிடலாம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவி உட்பட மூன்று பொறுப்புகளை கோரிய போதிலும் இறுதியில் அவருக்கு வேட்பாளராக போட்டியிடும் வாய்ப்பு மட்டுமே வழங்கப்பட்டதாக சுகா தார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த நிகழ் வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார். அங்கு பேசிய அவர்,

தற்போது பல்வேறு விடயங்கள் நடைபெறுகின்றன. முன்னாள் ஜனாதிபதிக்கு வேட்பாளராக போட்டி யடுவதற்கு மாத்திரம் சந்தர்ப்பம் வழங் கப்படுகிறது. 24ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவின் கூட்டம் திடீரென இரத்து

(கொழும்பு)

எதிர்வரும் 9ஆம் திகதி அனு ராதபுரத்தில் நடத்துவதற்கு திட்ட மிடப்பட்டிருந்த முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவின் முதலா வது தேர்தல் பிரசார கூட்டம் திடீ ரென இரத்து செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அனுராதபுரம் மாவட்ட தலைவர் முன்னாள் 23ஆம் பக்கம் பார்க்க....

## காமினி செனரத்துக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

பெருமளவு தரகுப்பணம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையதிகாரி காமினி செனரத் மீது சிஐடியால் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற் றச்சாட்டு தொடர்பில் ஏற்கெனவே பொலிஸார் கொழும்பு கோட்டே நீதி மன்றில் பி அறிக்கையை சமர்ப் பித்துள்ளனர்.

இந்த பி அறிக்கையில், காமினி செனரத் கொண்டிருந்த வங்கிக் கணக்குகள் தொடர்பில் விசாரணை களை மேற்கொள்ளும் முகமாக வங்கிக் கணக்குகளை பரீட்சிக்க அனுமதிக்க 24ஆம் பக்கம் பார்க்க....

# கூட்டமைப்பிலிருந்து வெளியேறுவதாக ஜாதிக ஹெல உறுமய அறிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட் டமைப்பு இருந்து ஜாதிக ஹெல உறுமய விலகத் தீர்மானித்துள்ள தாக அக்கட்சியின் பொதுச் செய லாளரும், மின்சக்தி அமைச்சரு மான சம்பிக்க ரணவக்க தெரிவித் துள்ளார்.

கொழும்பில் நேற்று ஞாயிற் றுக்கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர இவ்வாறு கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியில் போட்டியிட மகிந்த ராஜ பக்ஷவுக்கு வாய்ப்பளிக்கப்பட்டதை அடுத்தே, அந்தக் கூட்டணியில் இருந்து விலகுவதென கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அடுத்த நாடாளுமன் றத் தேர்தலில் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரில் ஜாதிக ஹெல உறுமய போட்டியிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் இந்த ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், கல்வியறிவு மிக்க, திறமையான, நேர்மை யானவர்களை நாடாளுமன்றத் துக்கு அனுப்ப வேண்டும்.

அது தொடர்பில் மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும். புதிதாக சிந் திக்க வேண்டிய காலம் தற்போது மலர்ந்துள்ளது என்று சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். (செ)

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோயின் விற்ற நபர் பொலிஸாரிடமிருந்து தப்பியோட்டம்

(கரணவாய்)

பருத்தித்துறைப் பகுதியில் ஹெரோயின் விற்பனை செய்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்ய முயன்ற போது அவர் பொலிஸாரை தள்ளிவிழுத்தி விட்டு தப்பியோடியுள்ளார்.

நேற்றுக்காலை 9 மணியளவில் பருத்தித்துறைப் பகுதியில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டபோது புத்தளத்திலிருந்து வந்த சி.ஐ.டி பொலிஸார் பிரஸ்தாப குடும்பஸ்தரை கைது செய்ய முயன்றுள்ளார்.

எனினும் அது கைகூடவில்லை ஹெரோயினுடன் பிரஸ்தாப நபர் தப்பியோடியுள்ளார்.

உடனடியாக பருத்தித்துறை தும்பளையிலுள்ள அவரது வீட்டிற்குச் சென்ற பொலிஸார் 285 கிராம் ஹெரோயினைக் கைப்பறியதுடன் அங்கிருந்து தாயையும் மகளையும் கைது செய்து பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (செ-3-60)

# அதிகாரத்தை மகிந்த பெற உதவிக்கரம் நீட்டும் சீனா?

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டு அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்காக சீன அரசாங்கம் பாரிய அளவிலான அழுத்தம் கொடுத்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இது வரையிலும் சீனா தூதரக அலுவலகத்தின் இரண்டாம் அதிகாரியான அரசியல் பிரதானி ரேன் பாகியன் இந்நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது வரையில் அவர் ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தின் சிரேஷ்டர்களிடம் இது தொடர்பில் அழுத்தம் கொடுத்துள்ள நிலையில் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் நடவடிக்கைகளுக்காக சீனா அரசாங்கம் நிதியுதவி வழங்குவதற்கு ஆயத்தமாவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அத்தோடு அவருக்கு அரசியல் பிரதானிகள் பலருடனும் நெருக்கமான தொடர்பு காணப்பட்டுள்ளதாகவும், அவர் இதுவரையிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டுள்ளதோடு மகிந்த ராஜபக்ஷவுக்காக சீனா தூதரக அலுவலக உதவியுடன் ஊடக பகிர்வுகளை மேற்கொள்வதாகவும் கூறப்படுகிறது. (செ)

## அண்ணா தொழில் அதிபர் நடராஜா காலமானார்



இணுவில் அண்ணா தொழில் நிறுவனத்தின் ஸ்தாபகரும் தொழில் அதிபருமான பொ.நடராஜா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அண்ணா தொழில் நிறுவனம் என்ற அமைப்பை ஆரம்பித்து உள்ளூர் உற்பத்திகளுக்கு ஊக்கமளித்த நடராஜா, நூற்றுக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்புக்களையும் வழங்கியவர்.

சாதாரண சிறுதொழில் முயற்சியை ஆரம்பித்து படிப்படியாக முன்னேற்றம் அடைந்த இவரின் உயர்ச்சியும் தொழில் பற்றும் பலராலும் புகழப்பட்டதுடன் பல விருதுகளையும் இவர் பெற்றுக்கொண்டார்.

வடபுலத்தின் உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த பெருமையும் இவரைச் சாரும்.

ஒரு சில வாரங்களுக்கு முன்னர் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இவர் கொழும்பு தனியார் மருத்துமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை காலமானார்.(ஓ)

# ஐ.தே.கவின் திருட்டு வேலையாலேயே மகிந்தவுக்கு வேட்புமனு அனுமதி

## எஸ்.பி. திஸாநாயக்க சாடல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் திருட்டுக்களினால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தலில் போட்டியிட வேட்பு மனு வழங்கியதாக அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி எதிர்பார்த்ததனைப் போன்று 20ம் திருத்தச் சட்டம் மற்றும் தகவல் அறிந்து கொள்ளும் சட்டத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்வைக்கவில்லை.

கடந்த அரசாங்கத்தை விடவும் ஐக்கிய தேசியக் கட்சி திருட்டுக்களில் ஈடுபட்டது.

கட்சியை தூய்மைப்படுத்தி கடந்த காலங்களில் இடம்பெற்ற வீண் விரயத்தை கட்டுப்படுத்தி நாட்டை முன்னோக்கி நகர்த்த ஜனாதிபதிக்கு முடியும். இனி வரும் காலங்களில் நாட்டில் மகிந்த சிந்தனை அமுல்படுத்தப்படாது. மைத்திரி ஆட்சியே முன்னெடுக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவிற்கு பிரதமர் வேட்பாளர் வழங்கப்படாமையை சிலர் எதிர்த்த போதிலும் வேட்புமனு மட்டும் வழங்கியமை சுதந்திரக் கட்சியின் வெற்றிக்கு முக்கிய காரணியாக அமையும்.

மகிந்தவிற்கு வேட்புமனு வழங்கியதன் மூலம் கட்சி பிளவடைவது தவிர்க்கப்பட்டது என எஸ்.பி. திஸாநாயக்க நேற்று ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (செ)

ஜெய் குருதேவ்

156 நாடுகளில் நடைபெறும் சர்வதேச பயிற்சி வாழும் கலை யோகா I



பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியினால் ஒழுங்கமைக்கப்பட்ட உடல், உளம், ஆன்மீகம் மேம்படும் யோகா, தியானம், மூச்சுப்பயிற்சி உள்ளிட்ட அற்புதமான பயிற்சி.

உடல் உபாதைகள் நீங்கி உடல் உறுதி பெறும் உள்ளத்தில் அமைதி உண்டாகும் மற்றும் இன்னோரன்ன பயன்கள் பெறலாம்.

காலம் : 06.07.2015 - 10.07.2015, மாலை 5.30-7.30

இடம் : நல்லூர் சட்டநாதன் கோயில் அருகாமை திவ்ய ஜீவன சங்க மண்டபம்

(1490)

ஆசிரியர்
திரு டி. சாயிராம்ஜி
(பெங்களூர் வாழும் கலை ஆச்சிரமம்)

தொடர்பு 0776655408, 0773233187. 0774301925

## முல்லை. இ.போ.ச சாலை பரிசோதகர் கைது

(முல்லைத்தீவு)

இலங்கை போக்குவரத்து சபையின் முல்லைத்தீவு மாவட்ட போக்குவரத்து சாலையில் நாளாந்த வருமானப் பணத்தில் ரூபாய் 76 ஆயிரத்தை கையிருப்பில் வைத்திருந்த சந்தேகத்தின் பேரில் முல்லைத்தீவு மாவட்ட இ.போ.ச சாலை பரிசோதகர் பொலிஸாரால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய மேற்பார்வை அதிகாரி தலைமையில் ஒரு குழுவினர் இ.போ.ச சாலைகளில் நாளாந்த வருமான பரிசோதனையை மேற்கொண்டிருந்தனர்.

அந்தவகையில் அவர்கள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையிலேயே மேற்படி குற்றம் கண்டுபிடிக்கப்பட்டு குறித்த ஊழியர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (செ-9)

# மரண அறிவித்தல்



## பொன்னையா நடராஜா

(தொழிலதிபர்- அண்ணா தொழிலகம்- இணுவில்)

இணுவில் தெற்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நடராஜா (தொழிலதிபர்- அண்ணா தொழிலகம்- இணுவில்) 2015-07-05 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தில்லை நடராஜா -புஸ்பமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமலரின் அன்புக் கணவரும், திவாகரன் (அண்ணா தொழிலகம்- இணுவில்) கண்ணதாசன் (அண்ணா தொழிலகம் - கொழும்பு), தயாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும், அமுதா, தர்ஷினி, மதிமகன் (Civil Engineer) ஆகியோரின் அன்பு மாமனாரும் அமரர் சாரதாமணிதேவி, அமரர் விவேகானந்தன், புனிதவதி, அன்னபூரணம், அன்னலட்சுமி, மகாலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்பு சகோரரும், அமரர் தம்பிராசா, பேரின்பநாயகிதேவி, அமரர் நடராசா, குலசிங்கம், செல்வநாயகம், அமரர் தில்லையம்பலம், ஸ்ரீஸ்கந்தவரோதயன் ஆகியோரின் மைத்துனரும், நந்திகா, பிரணவன், இராகவி, மதிதயனன், மதிதயனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

0777301207, 0779675599,
077334860, 0777682265

தகவல் : குடும்பத்தினர்
அண்ணா தொழிலகம், இணுவில்.

(சி-1484)

வேலைவாய்ப்பு
(பகுதி நேர / முழுநேர)

* சப்ளையர்
* கிளீனர்

கோல்டன் ஸ்ரார் ரெஸ்ரோரன்ட்
(ஆரியகுளம் சந்தி அருகில் யாழ்ப்பாணம்)

(1050)

T.P 0777404883 / 0772230541

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
09 * 10 * 1961



இறைவன் மடியில்
06 * 07 * 2013

## அமரர் இராயப்பு மரிய கொறற்றா (மணி)

ஆண்டு இரண்டு போனாலும் ஆறவில்லை
எம் துயரம்- மணி தினம் தினம் உன் பிரிவால்
வாடுகின்றோம் ஒரு முறை வந்து ஒரு வார்த்தை
சொல்விரா வடிக்க இனி எங்கள் விழிகளில்
கண்ணீரும் இல்லை. பெற்றவர்கள் பெருமை
கொள்ள பேரொளியால் ஒளிர்ந்தாயன்று!
உடன் பிறப்பை நேசித்து உயர்வாய் மகிழ்வித்தாயன்று
யார் கண்டோம் உன் வாழ்க்கையை
காலன் மிக விரைவில் எடுப்பான் என்று
மனம் குமுறுகிறது. விழிநீர் சொரிய
உங்கள் ஆத்மா சாந்திக்காக
பிரார்த்தித்து நிற்கின்கின்றோம்.
என்றும் உங்கள் பிரிவால் துயருறும்



(1044)

அடைக்கல நாயகி வீதி,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

தகவல்
கணவர், மகன், அப்பா, அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மண்ணின் மைந்தன் கணேஷ்வரன் வேலாயுதம்

**அல்லலுற்று துன்பத்துடன் கஷ்டப்படும் வறிய மக்களுக்காக நேசக்கரம் கொண்டு உதவிடும் யாழ். மண்ணின் மைந்தன் கணேஷ்வரன் வேலாயுதம்**

சிவன் பவுண்டேசன் நிலையத்தின் பணிப்பாளர் கணேஷ்வரன் வேலாயுதம் விசேட தேவையுடைய சிறார்களுக்கு மட்டும் உன்னத உதவிகள் புரிபவர் என்ற வரையறைகளுக்கெல்லாம் அப்பால் சென்று பல பரந்த பன்முகப்படுத்தப்பட்ட மனிதாபிமான தொண்டுகள் ஆற்றி வருகிறார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு தம் வாழ்க்கையை இன்னும் சரியாக அமைத்துக் கொள்ள முடியாமல் பசி, பட்டினி, நோய் நொம்பலத்தில், வாழ்வாதார வசதிகளின்றி வலிகளைச் சுமந்து வாழும் குடா நாட்டு மக்களைத் தேடிச் சென்று நேசக்கரம் கொண்டு உதவிகள் புரிந்து வரும் ஈர இதயமுள்ள மனிதர் இவர்.

துன்பப்பட்ட மக்கள் எவராக இருந்தாலும் சரி அவர்களுக்கு உதவும் தாராள மனம் படைத்தவர். இவர் குடா நாட்டு மக்களுக்காக தொடர்ந்து ஆற்றும் பணிகள் ஏராளம். இதனால் இவரை போரினால் அல்லலுற்று துன்பப்பட்டு தற்போது முகாம்களில்



வாழும் மக்கள் எல்லோருமே யாழ். மண்ணுக்குக் கிடைத்த பெரிய வரம் என போற்றிப் புகழுகின்றனர்.

சமூகப் பணிகளில் மற்றுமொரு சாதனையாக இவருடைய சமூக இயக்கச் செயற்பாடுகள் உயர்ந்து நிற்கின்றன. இவரை விட யாழ். மண்ணில் பண பலம் படைத்த செல்வந்தர்கள் வாழ்ந்தாலும் கொடுக்கும் மனம் இல்லை. ஆனால் இவர் தான் கஷ்டப்பட்டு தேடிய பணத்தை தாராளமாக அள்ளிக் கொடுக்கும் உயர்ந்த மனம் படைத்தவர் கணேஷ்வரன் வேலாயுதம்.

## தொண்டுகள்

சுன்னாகம் மயிலங்காடு முன்பள்ளி நிலையப் பாடசாலை சிறார்கள் 90 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குதல். இந்தப் பாடசாலைக்கு 1000 லீற்றர் தண்ணீர் தாங்கி ஒன்று வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன் இங்குள்ள இரு மலசலகூடங்களும் திருத்தியமைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் கப்பம்புலம் சன சமூக நிலையத்தின் முன்பள்ளிப் பாடசாலையிலுள்ள 50 சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதற்கென ஒரு தண்ணீர் தாங்கியும் வழங்கி வைக்கப்பட்டது.

சுன்னாகம் சிவன் முன்பள்ளிப் பாடசாலைக்கு 40 கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் இதற்கென 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி உபகரணங்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

கல்லாக்கட்டுவன் கலைவாணி சனசமூக நிலையத்தின் முன்பள்ளிச் சிறார்கள் 80 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைத்ததுடன் மின் இணைப்பைப் பெற்றுக் கொள்வ தற்காக 20 ஆயிரம் ரூபா நிதி உத வியும், இரு தண்ணீர் தாங்கிக ளும் வழங்கி வைக்கப்பட்டுளளன.

மாகியப்பிட்டி ஸ்ரீ அம் பாள் சனசமூக நிலையத் தின் முன்பள்ளிப் பாடசாலையின் அபிவிருத்திப் பணிக்காக 50 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஊரெழு பாரதி சனசமூக நிலைய முன்பள்ளிப் பாடசாலைச் சிறார்கள் 50 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மின் இணைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக 15 ஆயிரம் ரூபா நிதி உதவியும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கூவில் கீரிமலை முன்பள்ளிப் பாடசாலையின் விளையாட்டு விழாவுக்கு பரிசுப் பொதிகள் பெற்றுக் கொள்வதற்காக 25 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மயிலங்காடு ஞானகலா முன்பள்ளிப் பாடசாலைக்கு ஆயிரம் லீற்றர் தண்ணீர் தாங்கியும் ஒரு மலசல கூடமும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு 50 கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஊரெழு சக்தி சனசமூக நிலையத்திற்கு ஒரு குழாய்க் கிணறு அமைத்துக் கொடுத்ததோடு 30 முன்பள்ளிப் பாட சாலை சிறார்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப் பட்டுள்ளன.

கோண்டாவில் ஞானவீர முன்பள்ளிப் பாடசாலையை மேலும் விஸ்தரிப்பதற்காக நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது. அச்செழு பூலசிட்டி வளர்மதி விளையாட்டுக்கழகத்திற்கு ஒரு இலட்சம் ரூபா நிதி உதவி வழங்கி வைக்கப் பட்டுள்ளது.

ஊரெழு வளர்பிறை முன்பள்ளிப் பாடசாலைப் பிள்ளைகளின் கண் சிகிச்சைக்காக நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டது.

வடமராட்சி நெல்லியடி விளையாட்டுக் கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களுடைய விளையாட்டு மைதானத்திற்கு அருகிலுள்ள பாதையை திருத்தியமைத்து கையளிக்கப்பட்டது.

நாவற்குழி வீரபத்திரர் கோவிலின் 2 கிலோ மீற்றர் பாதை திருத்தியமைத்துக் கையளிக்கப்பட்டுள்ளது.

புனிதநகர் **கற்ககோலம்** முன்பள்ளிப் பாடசாலையின் 100 சிறார்களுக்கு கற்றல் உபகரணங்களும் மற்றும் விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன காலை இழந்த ஒருவருக்கு மீன் வியாபாரம் செய்வதற்காக 5 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலைப் பிள்ளைகளின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக பகுதி நேர வகுப்புக்கள் நடத்த நான்கு ஆசிரியர்களுக்கான மாதாந்தச் சம்பளமும் இங்கு வழங்கி வருகிறது.

நாகர் கோவில் கிழக்கு முன்பள்ளிப் பாடசாலையைத் திருத்தி அமைப்பதற்கு நிதி உதவி வழங்கியதோடு இங்குள்ள



மூன்று விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நாவற்குழி மறவன்புலவு முன்பள்ளிப் பாடசாலையின் 90 சிறார்களுக்கு கற்றல் உபகரணங்களும் மற்றும் ஒரு குழாய்க் கிணறும் நிர்மாணித்து வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இருபாலை வசந்தபுரம் பொது மண்டபத்திற்கு வாசிகசாலை நிர்மாணித்து கொடுக்கப்பட்டுள்ளது.

இருபாலை வசந்தபுரம் கிழக்குப் பகுதிக்கு இரு குழாய்க் கிணறு நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.


இருபாலைப் பகுதியில் ஒரு மசலசலகூடம் திருத்தியமைக்கப்பட்டுள்ளதுடன் ஒரு கிணறு புனர்நிர்மாணம் செய்து வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் வீடுகள் கட்டுவதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

நாவற்குழி தெற்கு முன்பள்ளிப் பாடசாலைக்கு கற்றல் உபகரணங்களும் ஒரு குழாய்க் கிணறு மற்றும் மலசலகூடமும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

நாவற்குழி முன்பள்ளிப் பாடசாலைக்கு கற்றல் உபகரணங்களும் 15 வருடங்களாக தண்ணீரின்றி காணப்பட்ட இந்தப் பாடசாலைக்கு குழாய்க் கிணறு ஒன்றும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு காந்தி சனசமூக நிலையத்திற்கு மின் இணைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக 40 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கியதுடன் கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

காரைநகர் ஊரி முன்பள்ளிப் பாடசாலைக்கு கற் றல் உபகரணங்களும் மற்றும் விளையாட்டு உபகர ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.



அளவெட்டி மல்லாகப் பகுதியில் மாற்றுத் திறனாளியினுடைய குடும்பத்திற்கு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கி வைக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் ஆறு பகுதி வகுப்புக்களுக்காக நிதி உதவி வழங்கி வைக்கப்படுகிறது. சீனிப் பந்தல் இளவாலை சுயதொழில் வாய்ப்புக்காக ஒரு நபருக்கு 10 ஆயிரம் ரூபா உதவி வழங்கி வைக்கப்பட்டது.

குடாப் பகுதியிலுள்ள முகாம்கள் அனைத்திற்கும் மலசலகூடம் அமைத்துக் கொடுத்தல், தண்ணீர் வசதி கள் செய்து கொடுத்தல், உலருணவு வழங்குதல் உள்ளிட்ட பல சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாவை கலட்டி முன்பள்ளிப் பாடசாலைக்கு விளை யாட்டுக்கான பரிசுப் பொதிகள் வாங்கி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

கொல்லன் கலட்டி சரஸ்வதி தமிழ் வித்தியாலயத்திற்கு சமையலறை கட்டடம் ஒன்று நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

குருநகர் ஐந்து மாடி மண்டபம் புனர்நிர்மாணம் செய்து கையளிக்கப்பட்டுள்ளது.

குருநகர் கொலைவிளக்கி மாதா தேவாலயத்திற்கு மாணவர்கள்படிப்பதற்கென 2 இலட்சம் ரூபா செலவில் பொது மண்டபம் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

குருநகர் கடற்றொழிலாளர்களின் பொது மண்டபம் புனர்நிர்மாணம் செய்வதற்கு 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.


குருநகர் கல்யாண மண்டபத்திற்கு 200 நாற்காலிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குருநகர் முன்பள்ளிப் பாடசாலைக்கு சிறுவர் பூங்கா, சுற்று மதில் ஆகியன நிர்மாணித்துக் கொடுக்கப் பட்டுளளதுடன் கற்றல் உபகர ணங்கள், விளையாட்டு உபகரணங்கள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நாவற்குழி பூம்புகாருக்கு தண்ணர் தாங்கி மற்றும் குழாய்க் கிணறு ஆகியவை அமைதது்க் கொடுக்கப்பட்டுள்ளன.

மணியமதோட்டம் முன் பள்ளிப் பாடசாலைக்கு நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வலது குறைந்த சிகிச்சை நிலையம், கல்வி,



மக்களுடைய அடிப்படைத் தேவைகள், சுகாதாரம் சுயதொழில் வாய்ப்பு என ஏராளமான சேவைகளை கஷ்டப்படும் மக்களுக்காக சேவையாற்றி வருபவர் இவர்.

**கணேஷ்வரன் வேலாயுதம்**
**பணிப்பாளர்**
**சிவன் பவுண்டேசன்**
**தொலைபேசி இலக்கம்**
**077- 511 0039**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறனறிந்து பொறுப்பு கொடு!

## துணிவே தொழில்

தொழில் தொடங்குவதற்கு மிகவும் முக்கியமான 7-சி தேவை என்பதையும் அதில் முதலாவதாக தெளிவு (Clarity) அவசியம் என்பதையும் கடந்த வாரம் பார்த்தோம்.

இப்பொழுது Competence எனப்படும் தகுதித் திறன் குறித்துப் பார்க்கலாம். ஒரு தொழிலைத்தொடங்கினீர்கள் என்றால் நீங்களே அனைத்து வேலைகளையும் எடுதது செய்து கொண்டிருக்க முடியாது. ஒவ்வொரு பணியையும அதற்குரிய நபரிடம் ஒப்படைத்து அவற்றை தொடர்ந்து மேற்பார்வை செய்து கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் உங்கள் தொழிலை எப்படி மேம்படுத்துவது, சந்தைப்படுத்துவது போன்ற விஷயங்களில் கவனம் செலுத்த முடியும். அனைத்து வேலைகளையும் நீங்களே இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தால், உரிய நேரத்தில் பணிகளை முடிக்க முடியாது. எனவே ஒரு வேலையை யார் சிறப்பாக முடிப்பார் என்பதை தேர்வு செய்து அந்த வேலையை அவரிடம் விடுவதே சிறப்பு என்று திருவள்ளுவரே சுட்டிக் காட்டியுள்ளார்.??

அடுத்தது constrainsts எனப்படும் தடைகள்: ஒரு வேலையைத் தொடங்கும் போதும் அதை செயல்படுத்தும்போதும் அதில் எதிர்ப்படும் தடைகளை முன்கூட்டியே ஆராய்ந்து அதை எப்படி எதிர்கொள்வது என்று திட்டமிட்டு செயல்பட வேண்டும். இதற்கு மிகச் சிறந்த உதாரணம் இநதியாவின் சத்யம் கம்ப்யூட்டர்ஸ்.


மிகவும் பிரம்மாண்டமாக வளர்ச்சியடைந்து அதல பாதாளத்துக்கு சென்ற நிறுவனம் இதுதான். வருமானம் பெருகியபோது அதை தவறான பாதையில் செலுத்தியதால் வந்த வினைதான் இந்நிறுவனத்தை மூடும் நிலைக்குத் தள்ளியது. பணியாளர்களின் எதிர்காலம் கேள்விக்குறியானது. இது வல்ல விடயம்.

இதிலிருந்து இந்நிறுவனத்தை மீட்டு மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வந்ததே மஹிந்திரா நிறுவனம், அதுதான் பாராட்டுக்குரியது. நொடிந்த நிலையிலிருந்த நிறுவனத்தை வாங்கி அதை மீண்டும் மிளிரச் செய்தது மஹிந்திரா. மறித்துப் போன சாம்பலி லிருந்து மீண்டும் உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவை போல இன்று மஹிந்திரா சத்யம் நிறுவனமாக பரிணமிக்கிறது.

தடைகள் எது என்பதையும் அதிலிருந்து மீள்வது எப்படி என்பதையும் திட்டமிட வேண்டும் என்பதற்கு இந்நிறுவனத்தின் கதை மிகச் சிறந்த பாடமாகும்.

நான்காவதாக creativity எனப்படும் சொல்லுக்கு புத்தாக்கம் என்கிற தமிழ்சொல் ஓரளவு பொருத்தமாக இருக்கும். இதற்கு சரியான உதாரணம் ஆப்பிள் நிறுவனம் தான். இந்த நிறுவனம் எதையுமே புதிதாக கண்டுபிடித்தது கிடையாது.

ஆனால் ஏற்கெனவே புழக்கத்தில் உள்ள பொருள்களின் மேம்பட்ட தயாரிப்பை உருவாக்கி பிரபலமாகத் திகழ்கிறது. செல்போன் பயன்பாட்டுக்கு வந்தபோது அதில் தொடு திரை வசதி மற்றும் பல் வேறு




வசதிகளையும் கொண்டு வந்தது.

அதாவது உபயோகிப்பாளரின் தேவைக்கேற்ப பொருள்களை தொடர்ந்து தயாரித்து வருகிறது இந்நிறுவனம். பெரிய காசெட் பிளேயரில் அல்லது வாக்மேனில் அதிகபட்சம் 15 பாடல்களை மட்டுமே கேட்டு வந்தவர்களுக்கு மிகச் சிறந்த விடிவெள்ளியாக வந்தது தான்

இந்நிறுவனத்தின் ஐ-பாட். இசைப் பிரியர்களின் தேவையை உணர்ந்து வெளிவந்தது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பிரிவை உருவாக்கி அதில் புதிய புதிய கண்டுபிடிப்புகளை, வாடிக்கையாளரின் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலான தயாரிப்பை உருவாக்கி வருகிறது இந்நிறுவனம்.

இதற்கு அடுத்தபடியாக கூற வேண்டுமென்றால் கூகுள். சர்ச் இன்ஜின் எனப்படும் இணையதள தேடுபொறி அளிப்பதில் ஏஞ்சல் பயர், யாகூ, ஏஓஎல், அல்டா விஸ்டா உள ளிட்ட நிறுவனங்கள் இருந்தன.

குறைவான நேரத்தில் மக்கள் தேடும் விஷயங்களை அளிக்க வேண்டும் என்ற நோக்கில் அதற்குத் தேவையான அல்காரிதம்க ளை எழுதி உருவாக்கினார்கள் இதன் நிறுவனர்கள். ஒரு விஷ யத்தை 0.06 நொடிகளுக்கும் குறைவான நேரத்தில் கூகுளில் தேடி விவரம் பெற முடியும். தேடு பொறி சாம் ராஜ்யத்தில் முதலிடத்தைப் பிடித்ததோடு இவர்கள் நின்று விடவில்லை.

அடுத்ததாக கூகுள் கண்ணாடி, கூகுள் டிவி என இவர்களது தேடல் தொடர்கிறது. ஆளில்லா கார்களை வடிவமைத்து அதை வெள்ளோட்டமும் விட்டுள்ளனர். நாசா நிறுவனம் கைவிட்ட ஒரு ராக்கெட் தளததையும் இந்நிறுவனம் குத்தகைக்கு எடுத்து அதிலும் பல்வேறு ஆராய்ச்சிகளைத் தொடர்கிறது.

புதிய தயாரிப்புகள், புத்தாக்கம் அளித்தால் நீங்களும் உச்சத்தைத் தொடலாம். வெற்றியின் ரகசிய மான மற்ற 3 சி என்ன என்பதை வரும் வாரத்தில் பார்க்கலாம்.?

## முதலீட்டு கருத்தரங்கு

பங்குச் சந்தையில் முதலீடு செய்வது பற்றிய தெளிவுபடுதலை வழங்கக்கூடிய கருத்தரங்கு இன்று இடம்பெறவுள்ளது.

இன்று மாலை 4 மணிக்கு இல.147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கொழும்பு பங்குப் பரிவர்தனையின யாழ்.கேட்போர் கூடத்தில இடம் பெறவுள்ள கருத்தரங்கு பற்றிய மேலதிக தகவல்களுக்கு 0777822014 அல்லது 0212221455 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனஜய அதிர்ஷ்டம் ரூ.10 இலட்சம் வெற்றி

சுன்னாகம் விற்பனை நிலையத்தின் ரி.பாலசுந்தரம் என்ற விற்பனை முகவரின் ஜனஜய ரிக்கட் கடந்த 26-ம் திகதி சீட்டிழுப்பில் ரூ.10 இலட்சம் வெல்லப்பட்டுள்ளது.

இதேபோல் குறித்த முகவரின் சுன்னாகம் விற்பனை நிலையத்தில் கடந்த வருடமும் பவர் லொட்டோ ரிக்கட் மூலம் ரூ.15 இலட்சம் வெல்லப்பட்டதுடன் இவ் வருடமும் 5 இலட்சம் மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் பரிசுகளும் வெல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 5-வது வருடமாக SLIITஇனால் மனித வளங்கள் செயலமர்வு




ஒரு தசாப்த காலப் பகுதிக்கு மேலாக கல்வியகத்தின் மூலமாக SLIIT மாணவர்களுக்கு பரந்தளவு கல்வி மற்றும் துறைசார் வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. தொடர்ச்சியான 5-வது வருடமாக தனது வருடாந்த மனித வளங்கள் செயலமர்வை துறை சார்ந்த பங்காளர்களுடன் இணைநது SLIIT ஏற்பாடு செய்திருந்தது.

இந்த செயலமர்வின் நோக்கம் எனபது துறையைச் சேர்ந்த SLIIT பட்டதாரிகளின் அறிவுமட்டத்தை பரிசோதிக்கும் வகையில் அமைந்துள்ளதுடன், நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று, எமது மாணவர்களை துறைசார்ந்த தேவைகளுக்கமைய தயார்ப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய வகையில் அமைந்துள்ளது" என சர்வதேச பீடத்தின் பீடாதிபதி கலாநிதி மஹேஷ கப்புருபண்டார தெரிவித்தார். மாணவர்களின் பெறுபேறுகள் தொடர்பில் Zillione சிஸ்டம்ஸ் சொலுஷன்ஸ் பொது முகாமையாளர் துசித குலரட்னே கருத்து தெரிவிக்கையில், "கடந்த 4 ஆண்டுகளாக மாணவர்களை நாம் SLIIT இல் மாணவர்களை இணைத்து வருகிறோம். கடந்த ஆண்டுகளில் SLIITஇல் பட்டப் படிப்பை பூர்த்தி செய்தவர்கள் பெருமளவு மேம்படுத்தல்களை மேற்கொண்டிருந்தனர். SLIIT ஊழியர்களின் மூலமாக வெளிப்படுத்தப்படும் அர்ப்பணிட பான செயற்பாட்டை நாம் வரவேற்கிறோம். உள்ளக பயிற்சி நிகழ்ச்சித திட்டங்களில் மேம்படுத்தல்களுக்கமைவாக SLIIT இலிருந்து மாணவர்களை இணைத்துக் கொள்ள அதிகளவு ஊக்குவிக்கப்படுகிறோம்" என்றார். "இது போன்ற வருடாந்த செயலாமர்வுகளை முன்னெடுப்பதை நாம் எமது பொறுப்பாக கொண்டுள்ளோ ம். இதன் மூலம் வெள்வேறு துறைசார்ந்த நிறுவனங்களுடன் நாம் உறவுகளை மேம்படுத்தி வருகிறோம். சிறந்த கல்வி அறிவுடனான ஆளுமை படைத்த சிறந்த ஒழுக்கமான மாணவர்களை தயார்படுத்துவது எமது நோக்கமாகும்" என கலாநிதி கபுருபண்டார தெரிவித்தார்.




## இந்திரா பினான்ஸ் நிறுவனம் செரண்டிப் பினான்ஸ் ஆனது!

கொமர்ஷல் வங்கி இந்திரா பினான்ஸ் நிறுவனத்தைப் பொறுப்பேற்று 9 மாத காலத்தின் பின் தனக்கு முற்றிலும் சொந்தமான அந்த இணை நிறுவனத்தை வரையறுக்கப்பட்ட செரண்டிப் பினான்ஸ் என பெயர் மாற்றம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது. இந்த நிறுவனம் கொமர்ஷல் வங்கியால 2014 செப்டம்பர் 1-ல் பொறுப்பேற்கப்பட்டது. இந்த கம்பனி இனிமேல் புதிய பெயரால் அழைக்கப்படுவதோடு புதிய வர்த்தக முத்திரையின் கீழ் இனம் காணப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகன லீசிங் சந்தை, வாடகைக் கொள்வனவு, ஈட்டுக் கடன், நுகர்வோர் நிதியியல் ஆகிய துறைகளில் தனது நிலையை தக்க வைத்துள்ள செரண்டிப் நிதி நிறுவனம் இலங்கையில் 11 கிளைகளைக் கொண்டுள்ளது. தற்போது நாட்டின் மிகப் பெரிய தனியார் வங்கியின் பூரண ஆதரவுடன் தனது நிலையை மேலும் தக்கவைக்கவும் விஸ்தரிக்கவும் நடவடிக் கைகளை எடுத்துள்ளதாக வங்கி அறிவித்துள்ளது. இந்திரா பினான்ஸ் நிறுவனத்தைப் பொறுப்பேற்றமை மற்றும் அதனை புதிய பெயரில் மீள் அறிமுகம் செய்துள்ளமையானது அதன் குத்தகை செயற்பாடுகளை மேலும் விஸ்தரித்து புதிய வாடிக்கையாளர் பிரிவொன்றுக்குள் ஊடுறுவ வழிவகுக்கும் என்று வங்கி தெரிவித்துள்ளது. செரண்டிப் நிதி நிறுவனம் ஊடாக வாகனாங் களைப பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு குறைந்த விலையிலான குத்த கைத தெரிவுகள் இதன் மூலம் வழங்கப்படவுள்ளன என்று வங்கியின் முகாமைதது வப் பணிப்பாளரும் பரதம நிறைவேற்று அதிகாரியுமானஜெகன்துரைரட்ணம் கூறினார்.

SERENDIB FINANCE

## மியன்மாருக்கு கொமர்ஷல் வங்கி



இலங்கையின் கொமர்ஷல் வங்கி மியன்மாரின் யங்கூன் நகரில் அதன் பிரதிநிதித்துவ அலுவலகத்தை கடந்த 8-ம் திகதி திங்கட் கிழமை திறந்து வைத்துள்ளது. அந்த நாட்டுக்குள் பிரவேசிக்க விரும்பும் இலங்கை மற்றும் பங்களாதேஷ் வர்த்தக துறையினருக்கு தேவையான அடிப்படை ஆலோசனைகளை வழங்குவதையும் அவர்களுக்குத் தேவையான வங்கி ஆலோசனை சேவைகள், நிதி பரிமாற்ற மற்றும் பணப்பரிமாற்ற சேவைகளை வழங்குவதை ஆரம்ப பணியாகக் கொணடு இந்த அலுவலகம்திறந்து வைக்கப்பட்டுள்ளது. மியனமாரில் பிரதி நிதித்துவ அலுவலகம் ஒன்றை திறப்பதற்கு அந்நாட்டு மத்திய வங்கியால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள இலங்கையின் முதலாவ்து வங்கி கொமர்ஷல் வங்கியாகும். கொமர்ஷல் வங்கியின் m Y t A பன்த்ரா வீதி டாகொன் டவுன்ஷிப், யங்கூன் மியன்மார் என்ற முகவரியில் அமைந்துள்ளது. கொமர்ஷல் வங்கியின் தலைவர் தர்மா தீரசிங்க, முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜெகன் துரைரட்ணம், இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கி இங்கு ஒரு பிரதிநிதித்துவ அலுவலகத்தை கொண்டிருப்பது அதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல பெரிதும் உதவியாக இருக்கும். அத்தோடு இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தக உறவுகளை மேம்படுத்தவும் இது வழிவகுக்கும்" என்றார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,016.20 | 7,007.05 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,900.59 | 3,914.98 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 3,943.974 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** சிரஸ் வாஸ்கடுவ(7.20),சிரஸ் கல்பிட்டிய(3.80), புளூ டைமன்ட்ஸ்(1.30),சிலோன் லெதர்(88.00),சிரஸ் ஹிக்கடுவ(18.20).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** ,ஈக்குவிட்டி ரு(50.20),புளூ டைமன்ட்ஸ்(X)(0.50), சிலோன் லெதர்(W) (0.60), சிஜஎப்எல்(0.70), ஏஐஏ இன்சுரன்ஸ்(251.90).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 132.00 | 135.19 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 205.34 | 211.77 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 145.50 | 150.75 |
| சுவிஸ் பிராங் | 139.02 | 144.26 |
| கனேடிய டொலர் | 104.42 | 108.38 |
| அவுஸ்திரேலிய டொலர் | 99.30 | 103.54 |
| சிங்கப்பூர் டொலர் | 97.38 | 100.79 |
| ஜப்பான் யென் | 1.06 | 1.10 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.10 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.37 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி கொள்கைகளை பாதுகாக்கும் தலைவருக்காக அணி திரள்வோம்

சந்திரிகா அறைகூவல்

(கொழும்பு)

**கட்சியின் கொள்கைகளை பாதுகாக்கும் தலைவரை பாதுகாக்க கட்சி அணிதிரள வேண்டும் எனவும் இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் அனைவரும் கவனமாக இருக்க வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

முன்னாள் ஜனாதிபதியின் 70 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வென்னப்புவ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஷெரோன் பெர்னாண்டோவின் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்களே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடிப்படை கட்சியின் கொள்கையிலும் அதன் நோக்கத்திலுமே கட்சியின் ஜீவன் உள்ளது.

இதனால், தலைவர்கள் இன்று வரலாம் நாளை சென்று விடலாம். எனினும் கட்சி எப்போதும் நிலைத்திருக்கும். தலைவரை அடிப்படையாக கொண்டு கட்சியின் இருப்பு இருக்காது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் எத்தனை தலைவர்கள் மாறியுள்ளனர். எனினும் கட்சி மாறவில்லை.

கட்சியின் கொள்கை மற்றும் நோக்கம் என்பன அதன் தலைவராக தெரிவாகும் நபரின் எண்ணங்களுக்கு அமைய திரிபுபடுத்தப்படலாம். அப்படி செய்து கட்சியை வலுவற்றதாகினர்.

கட்சியின் கொள்கைகளை காட்டிக்கொடுத்து மக்களுக்கு துரோகியாக செயற்பட்ட விதத்தை நாங்கள் பார்த்தோம்.

பாரிய புரட்சியை செய்து அப்படியானவர்களிடம் இருந்து கட்சியை எம்மால் காப்பாற்ற முடிந்தது எனவும் முன்னாள் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


# சேவை நலன் பாராட்டு

## 06.07.2015



**திரு. செல்லையா சிவகுமாரன்**
**B.Com. PGDE(SLTS-I)**
**(யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம். பிரதி அதிபர், சாரணர் மாவட்ட உதவி ஆணையாளர், காங்கேசன்துறை)**

திரு. செல்லையா சிவகுமாரன் அவர்கள் 30 வருட ஆசிரிய சேவையில் எமது கல்லூரியில் 1991- 1995 காலப்பகுதியில் ஆசிரியராகவும் 2010-2015 காலப்பகுதியில் பிரதி அதிபராகவும் 10 வருடங்கள் சேவையாற்றி (06.07.2015) இன்று சேவையிலிருந்து ஓய்வுபெற்று மணிவிழாவினைக் காணும் எமது பிரதி அதிபரை எல்லா வளமும் பெற்று தமது குடும்பத்தினருடன் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

ஆன/சங்கட்டிக்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம்- புத்தளம்- ஆசிரியர்: 26.12.1985-08.05.1989
ஆன/முந்தல் தமிழ் வித்தியாலயம்- புத்தளம்- ஆசிரியர்: 09.05.1989- 31.12.1990
யா/ விக்ரோறியாக் கல்லூரி - சுழிபுரம்- ஆசிரியர்: 01.01.1991-31.12.1995
வ/வவுனியா மகா வித்தியாலயம்- வவுனியா- ஆசிரியர் : 01.01.1996-31.12.2004
யா/ இணுவில் மத்திய கல்லூரி- இணுவில்- ஆசிரியர்: 01.01.2005- 20.09.2010
யா/ விக்ரோறியாக் கல்லூரி - சுழிபுரம்- பிரதி அதிபர்: 21.09.2010-06.07.2015

(5001)

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.**


# ராசி பலன்

06.07.2015
(ஆனி 21, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
பஞ்சமி முன்னிரவு 11.05 மணிவரை
சதயம் முன்னிரவு 10.59 மணி வரை
இராகுகாலம் 7.28-8.58 மணிவரை
சுபநேரம்-11.58-1.28

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | சூரி செவ் புதன் |
| சந் | கிரக நிலை | | |
| | | | குரு சுக் |
| | | சனி | ராகு |

**மேடம்:** ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், பயணங்கள் கைகூடும்.

**இடபம்:** சொல்லை செயலாக்கிக் காட்ட முற்படுவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு வித்திடுவீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** பகை விலகி பாசம் கூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

**கடகம்:** நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், திருடர் பயமுண்டு, எடுத்த காரியங்கள் தாமதமாக நிறைவேறலாம்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், களஸ்திர நன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கன்னி:** மறைமுகப் போட்டிகளை சமாளிப்பீர்கள், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், தேகநலன் சீராகும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** எதிர்பார்ப்புகள் கைகூடும் வாய்ப்புண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம், முயற்சிகள் எளிதில் கைகூடும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**மகரம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**கும்பம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**மீனம்:** உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், தொழிலில் சிறு மாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், தூர தேசத்திலிருந்து வரும் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தலைமையில் மாற்றம் அவசியமானது

## ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் சுட்டிக்காட்டு





(யாழ்ப்பாணம்)

**தென்னிலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் தமிழ் தலைமையில் மாற்றம் ஏற்படாவிட்டால் எமது மக்களுக்கு எவ்விதமான பயன்களும் கிடைக்கப் போவதில்லை என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கட்சி உறுப்பினர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மத்தியில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் கட்சியினால் முன்னெடுக்க வேண்டிய செயற்றிட்டங்கள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டியது அவசியமானது.

அதன்பிரகாரம் நடைபெறவுள்ள இத்தேர்தலில் தென்னிலங்கை அரசியலில் மாற்றம் ஏற்பட்டாலும் தமிழ்த் தலைமையில் மாற்றமொன்று ஏற்படவேண்டியது அவசியமானது.

அவ்வாறானதொரு மாற்றம் ஏற்படும் பட்சத்திலேயே அதனூடாக எமது மக்களும் உரிய பயன்களை பெற்றுக் கொள்ள முடியும். இதை விடுத்து இவ்வாறு மாற்றமொன்று ஏற்படாதவிடத்து எவ்வித பயனகளும் ஒருபோதும் கிடைக்கப் பெறப்போவதில்லை.

மக்களின் நிலம் மக்களுக்கே சொந்தம் என்ற எமது கட்சியின் நிலைப்பாட்டிலும் நாம் உறுதியாகவே இருக்கின்றோம். அதுமட்டுமன்றி தொடர்ந்து நாம் ஆட்சியில் இருப்பதன் ஊடாகத்தான் எமது மக்களின் வாழ்வாதாரம் மட்டுமன்றி அரசியல் உள்ளிட்ட உரிமைகளையும் வென்றெடுகக முடியுமே என்பதை நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

ஆனால் ஆட்சி மாற்றத்தினூடாக பலவற்றை செயற்படுத்துவோம் என்று கூறிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தரப்பினர் இதுவரையில் எதை சாதித்துள்ளார்கள் என்றும் கேள்வி எழுப்பியதுடன், தொடர்ந்தும் மக்களுக்கு இவர்களால் எதை சாதிக்க முடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது மக்களின் மீள்குடியேற்றம், வாழ்வாதார மேம்பாடு, சமுர்த்தி வேலைத்திட்டங்கள், காணாமற் போனோர் மற்றும் அரசியல் கைதிகளின்விடுதலை தொடர்பல் எடுக்கப்பட வேணடிய நடவடிக்கைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெளிவு படுத்தினார். (இ-7)




## சுயேட்சைக்குழுக்கள் கட்டுப்பணத்தை 13 ஆம் திகதி வரை செலுத்த முடியும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் சுயேட்சை குழுக்கள் தமது கட்டுப் பணத்தை தேர்தல் அறிவித்த நாளில் இருந்து எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரையான அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணிவரையும் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல 12 மணிவரையும் கட்டுபபணத்தை செலுத்த முடியும்.

வேட்பு மனு தாக்கல் 6 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரையான அலுவலக நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரையும், எதிர்வரும் 13 ஆம் திக்தி திங்கட் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் தமது வேட்பு மனுவை தாக்கல் செய்ய முடியும்.

அத்துடன் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தபால் மூலம் வாக்காளர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என யாழ. மாவட்ட தேர்தல் திணைக்களத் தகவல்கள் தெரிவிக் கின்றன. (இ-7)

## மானிப்பாய் மருதடி விநாயகர் தர்மகர்த்தா சபைக்கான தேர்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர்சங்க நடப்பு வருட அங்கத்தவர்கள் மட்டுமே இத்தேர்தலில் போடடியிடவும் வாக்களிக்கவும் உரிமையுடையவர் ஆவர்.

தேர்தலில் போட்டியிட விரும்பும் அங்கத்தவர்கள் தேர்தல் வைப்புப் பணமாக ஆயிரம் ரூபாவை இலங்கை வங்கி மானிப்பாய் கிளையில் உள்ள வழிபடுவோர் சங்கக் கணக்கு இல. 638 இல் வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச்சிட்டை நியமனப்பத்திரத்துடன் இணைக்க வேண்டும். அவ்வாறு செய்யப்படாத நியமனப்பத்திரங்கள் தேர்தல் அதிகாரியால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலும் நியமனப் பத்திரங்களை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதிவரை காலை 9 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை பெற்றுக் கொள்ள முடியும்.

அபேட்சகர் நியமனப் பத்திரங்களை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை தாக்கல் செய்ய முடியும்.

அபேட்சகர் நியமனப்பத்திரங்களை வாபஸ் பெறுவதாயின் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9 மணிமு தல் நண்பகல் 12 மணிவரை அதனை வாபஸ் பெற முடியும என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி உ.யசோதா அறிவித்துள்ளார். (இ-3)

## அலங்கார உற்சவம்

கோண்டாவில் அருள் மிகு ஸ்ரீ சாமுண்டாதேவி சமேத ஞானவைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூஜை இடம்பெறும். (இ-3)

## புதிய வகுப்புக்கள்

யாழ். மத்திய கல்லூரியில் 2017 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த (உ/த) கலைப்பிரிவு, வர்த்தகப்பிரிவு, விஞ்ஞானப் பிரிவு ஆகியவற்றின் புதிய வகுப்புக்கள் இன்று 6ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் எனவும் 2016ஆம் ஆண்டிற்கான முதலாம் தர விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன எனவும் அதிபர் சி.க. எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (யு.ம)

## பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

காரைநகர் -களபூமி திக்கரை அருள்மிகு திக்கரை முருகமூர்த்தி கோவில் பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் பிரம்மோற்சவம் இடம்பெறும். (இ-3)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை 7 ஆம் திகதி (செவ்வாய்) காலை 9 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர்கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அனைத்து தொண்டராசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தலைவர் அறிவித்துள்ளார். (இ

## கலஷாபிஷேகம்

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரதராஜப் பெருமாள் தேவஸ்தான மகா சஹஸ்ர கலஷாபிஷேக விழா இன்று முற்பகல் 11.57 மணி முதல் பிற்பகல் 1.29 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்தியாவிலிருந்து வருகை தரும் யக்ஞாச்சாரியார்களினால் இக்கலஷாபிஷேகம் ஸ்ரீ வைஷ்ணவசம்பிரதாயமுறைப்படி நடைபெறவுள்ளது. (இ-3)



ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் மாணவிகளின் வரவேற்பு நடன நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கெண்டோரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத அவுஸ். பயணம்; கடும் நிபந்தனையுடன் பிணை

(கொழும்பு)

**சட்டத்திற்கு முரணான வகையில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயற்சி செய்த போது கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தின் உத்தரவில் விளக்கமறியலில் இருந்தவருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் கடும் நிபந்தனையுடன் பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளார்.**

அவுஸ்திரேலியாவிற்கு சட்ட விரோதமாக படகில் பயணம் மேற்கொள்ள முயன்ற போது, குடிவரவு குடியகல்வு சட்டத்தின் 45 சி என்ற பிரிவின் கீழ் குற்றஞ் சாட்டி, வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நபர் ஒருவர் பருத்தித்துறை நீதிமன்றத்தினால் கடந்த மூன்றரை மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் இவர் தொடர்பான பிணை மனுவை தாக்கல் செய்த சட்டத்தரணி, குற்றஞ் சாட்டப்பட்டவரின் குடும்பத்தின் தன்மை மற்றும் அந்தக் குடும்பத்தில் நிலவுகின்ற வறுமை நிலைமை என்பவற்றைச் சுட்டிக்காட்டி, அவருக்கு பிணை வழங்குமாறு நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்திருந்தார்.

இந்த மனுவையும் பிணை விண்ணப்பத்தையும் பரிசீலனை செய்த நீதிபதி இளஞ்செழியன், இத்தகைய குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு, விதி விலக்கான சந்தர்ப்பங்களில் மாத்திரமே, பிணை வழங்கலாம் என குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் 47 ஆம் பிரிவு பரிந்துரை செய்திருப்பதை எடுத்துக்காட்டி, குற்றஞ் சாட்டப்பட்டவரின் குடும்ப நிலைமையைக் கருத்திற் கொண்டு தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் செல்ல அனுமதித்துள்ளார்.

ஆயினும் பிணைக்காக கையெழுத்திடுகின்ற இருவரும், பருத்தித்துறை நீதிமன்றத்தின் நீதிபதியினால் ஏற்றுக் கொள்ளப்படுபவர்களாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையில் இந்தப் பிணை உத்தரவை நீதிபதி வழங்கியுள்ளார்.

மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் பருத்தித்துறை நீதிமன்றத்தில் சென்று எதிரி கையெழுத்திட வேண்டும் என்றும் நீதிபதி தமது பிணை அனுமதியில் நிபந்தனை விதித்து உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## அமெரிக்காவின் ஜி.எஸ்.பி.வரிச்சலுகை மீண்டும் இலங்கைக்கு கிடைக்க வாய்ப்பு

கடந்த 2013ஆம் ஆண்டு முதல் இரத்துச் செய்யப்பட்டிருந்த அமெரிக்காவின் வர்த்தக சலுகையான ஜி.எஸ்.பி. மீண்டும் வழங்கப்படவுள்ளது.

இதற்கான உறுதியை அமெரிக்கா அளித்துள்ளது.

இதன்படி இந்த சலுகை இம்மாதம் 29 ஆம் திகதி முதல் வழங்கப்படும் என்று பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார். இந்த சலுகையின் மூலம் இலங்கைக்கு பாரிய பொருளாதார நன்மைகள் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## பலர் ஐ.தே.கவுடன் இணைகின்றனர்

(கொழும்பு)

ஜனவரி 8 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தோல்வியடையச் செய்ய ஒன்றிணைந்த சக்திகள் தற்சமயம் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைவதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ என்பவர் காலாவதியான பொருள். அவரால் நாட்டுக்கு வழங்கக் கூடியது ஒன்று மில்லை.

ஜனவரி 8 ஆம் திகதி அவரை தோல்வியடைய ஒன்றிணைந்த அனைவரும் இன்று ஐக்கிய தேசிய கட்சியுடன் கைகோர்க்க தீர்மானித் துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்ட மைப்பு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொலைபேசி அழைப்புக் களை மேற்கொண்டு ஐக்கிய தேசிய கட்சி சார்பில் தேர்த லில் போட்டியிட தயார் என கூறுவதாக அமைச்சர் லக்ஷ் மன் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## விசா இன்றி தங்கியிருந்த சீனப் பெண் ஒருவர் கைது

கொழும்பு, கொள்ளுப்பிட்டி - கிளேன் ஆபர் பிரதேசத்தில் விசா இன்றி தங்கியிருந்த சீன பெண்ணொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த மூன்றுமாதங்களுக்கு முன்னர் இலங்கை வந்திருந்த அவர் விசா அனுமதிப்பத்திரமின்றி நாட்டில் தங்கியிருந்ததாக ஆரம்ப விசாரணைகளில இருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சீன பெண் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (இ-7)

## கோளாறு கரணமாக ரயில் இடைநிறுத்தம்

கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி நேற்றுக் காலை பயணித்துக் கொண்டிருந்த ரயில் தொழில்நுட்பக் கோளாறு கரணமாக கணேமுல்ல ஜாபொட ரயில் நிலையங்களுக்கு இடையில இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ரயிலின் இயந்திரத்தை திருத்தும்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. (இ-7)

## இலட்சினை வெளியீடு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு விழா நிகழ்விற்கான உத்தியோகபூர்வ இலட்சினை வெளியீட்டு விழா நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரியின் றொமைன்குக் மண்டபத்தில் கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இலட்சினை வெளியீட்டு நிகழ்வில் யாழ். மெதடிஸ் மிஷன் திருச்சபை தேவாலய குருமுதல்வர் வணரவிசங்கர் நைல்ஸ் அடிகளார் கலந்துகொண்டு இலட்சினையை வெளியீட்டு வைக்கவுள்ளார். இந்நிகழ்வில் கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளார்கள். கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிகழ்வுகளின் ஆரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தொடக்கம் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-21)

## விபத்தில் பெண் பலி

காலி - கொழும்பு பிர தான வீதியில் பென்தொட்ட பகுதியில் நேற்று முன்தினம்இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்தும் கார் ஒன்றும் மோதியதாலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் 39 வயதுடைய பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணை களை மேற் கொண்டு வருகின்றனர். (இ-7)


அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில்
இன்று மாம்பழத் திருவிழா




உற்சவத் திருநாள்
உன்னதமான இணுவைக் கந்தனுக்கு
உற்சவத் திருநாளாம்
தொன்மையே வேரோடி நிற்க
தோரணம் தொங்கிடும் திருநாளாம்
அலங்கரித்து வருகின்றான் வீதியுலா
அடியவர்க்கு இது பெருவிழா
அங்கமெல்லாம் உன் திருநீறு
சிந்தையெல்லாம் சிலிர்த்து நிற்க
அவன் அருள் நாமமே சொல்லி நிற்க
உன் அருள் வேண்டி நிற்கின்றோம்
இணுவைக் கந்தா

இணுவைக் கவி:
V.V. சகிந்தன்
16 ஆம் திருவிழா உபயகாரர்
(சி-1389)



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 71 செவ் 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/634 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 62 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: G/1079 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 28<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/635 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 33<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/1081 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: B.COM/ வங்கி முகாமையாளர்<br>தொ.இ: B/636 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 52 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: HNDA<br>தொ.இ: G/1090 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 41<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, MSC/ அரச தொழில்<br>தொ.இ: B/639 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 14 செவ் 12 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/1095 |


கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளை வழங்கியே மக்களின் வாக்குகளை த.தே.கூ. பெற்றுவருகிறது

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் தெரிவிப்பு





(கிளிநொச்சி)

**ஒவ்வொரு தேர்தலிலும் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளை வழங்கியும், நம்பிக்கைகளையும் ஏற்படுத்தியுமே தமிழ் மக்களின் பெருமளவு வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்று வருகிறது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

கடந்த 3 ஆம் திகதி கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் நடந்து முடிந்த எல்லாத் தேர்தல்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு வழங்கிய எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை. அவர்கள் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் உறுதியளித்த எந்த விடயங்களும் நிறைவேற்றப்படவில்லை. வாக்குகளை பெறுவதற்காக நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளை வழங்கி வாக்குகளை பெற்று பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுகின்றனர். இது கடந்த தமிழ் மக்களுக்கு இருக்கின்ற கடந்த கால அனுபவம். எனவே இந்த அனுபவத்தின் ஊடாக தமிழ் அரசியல் பரப்பில் தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டு வருகின்ற கலாசாரம் மாற்றப் பட வேண்டும் எனக் குறிப்பிட்ட அவர்,

தேர்தல் காலங்களில் போலித் தேசியம் பேசி மக்களின் உணர்வுகளை தூண்டி அதனை வாக்குகளாக மாற்றும் கைங்கரியத்தை இவர்கள் கச்சிதமாகவே மேற்கொள்வார்கள். எனவே தேர்தல் காலங்களில் மக்கள் தெளிவாகவும் விழிப்பாகவும் இருக்கவேண்டும். வெறும வார்த்தை வீரர்களை அன்றி மக்களுக்காக அர்ப்பணித்து உழைக்க கூடியமக்கள் பிரநிதிகளை மக்கள் தெரிவு செய்ய வேண்டும். அதன் மூலமே மக்கள் தங்களின் முன்னேற்றத்திற்கான வழியினை ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

கடந்தகால போராட்டத்திற்கு எதிராகவும், விரோதமாகவும் செயற்பட்டவர்கள் எல்லாம் இன்று அந்த தியாகங்களை உரிமை கோரிக் கொண்டு வருகின்றார்கள். இவ்வாறானவர்களால் மக்களுக்கு எவ்வித சிறுநன்மையும் கிட்டப் போவதில்லை. மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்க முடியாதவர்கள் எவ்வாறு நிரந்தர அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாணப் போகின்றார்கள் என கேள்வி எழுப்பிய சந்திரகுமார்,

யுத்தத்தின் பாதிப்புக்களை அதிகம் சுமந்த மக்களின் மேம்பாட்டுக்காக கடந்த ஐந்து வருடங்களில் அர்ப்பணிப்புடன் உழைத்திருக்கின்றோம். அதனை மனச்சாட்சியுள்ள எவரும் மறுக்க மாட்டார்கள். எங்களது உழைப்பின் காரணமாகவே வடமாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திக்கு அதிகநிதியீட்டங்களை பெற்றிருக்கின்றோம். அதன் பயனாக ஓரளவுக்கேனும் கிளிநொச்சியின் உட்கட்டுமானப் பணிகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றோம். இருந்தும் இவை போதுமானது அல்ல. இன்னும்ஏராளமான தேவைகளுடன் கிளிநொச்சி காணப்படுகிறது. மக்களின் வாழ்க்கையிலும் ஒரு நிரந்தர வருமானத்தை பெறும் வகையில் தொழில் துறை திட்டங்களை உருவாக்க வேண்டும். அதன் மூலமே நிறைவான வாழ்க்கையை எம் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அதற்காக இன்னும் சில வருடங்கள் அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டும். எனவே அதற்காக அர்ப்பணிப்புடன் உழைக்கின்ற மக்கள் பிரதிநிதிகளை மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளாக தெரிவு செய்யவேண்டும் எனவும் குறிப்பிட்டார். இச்சந்திப்பில் கிளிநொச்சி வர்த்தக சங்கத் தலைவர் இரத்தின மணி, ஊற்றுப்புலம் கிராம அபிவி ருத்தி சங்கத் தலைவர் முகுந்தன், கமக்கார அமைப்பின் தலைவர் ஆனந்தன், கிராம அபிவிருத்திச் சங்கத்தன் உப தலைவர் நாகராசா, மாற்றுவலுவுள்ளோர் கிராமிய அமைப்பின் தலைவர் சிறிதரன், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)




# ஜனநாயக பலத்தை காட்டும் தருணம் உருவாகியுள்ளது

## சிவசக்தி ஆனந்தன் அறிக்கை

ஜனநாயக பலமே எம்மிடம் தற்போதுள்ளது. அதனை சரியான முறையில் பயன்படுத்துவதன் ஊடாகவே எமது எதிர்காலத்தை பாதுகாத்துக்கொள்ள முடியும். அதற்கான தீர்க்கமான தருணமே எதிர்வரும் பொதுத் தேர்தலாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

இந்நாட்டில் எமது உரிமைகளுக்காக ஜனநாயக ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் கடந்த காலங்களில் போராட்டங்களை முன்னெடுத்தோம். ஈற்றில் அவை பலமிழக்கச் செய்யப்பட்டன. தற்போது மீண்டும் ஜனநாயக ரீதியான போராட்டங்களை முன்னெடுக்கவேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

யுத்தம் நிறைவடைந்து 6 ஆண்டுகள் கடந்துள்ள போதும், எமது உரிமைகளுக்காகவும் அபிலாஷைகளுக்காகவும் சுதந்திரமான கருத்துக்களையோ போராட்டங்களையோ மேற்கொள்வதற்கு உரிய சூழல் ஏற்படுத்தப்படவில்லை.

இராணுவ புலனாய்வாளர்களின் விசேட கண்காணிப்புக்களுக்கு மத்தியிலும் இனவாதிகளின் புலிச்சாயச் சித்திரிப்புக்களுக்கு மத்தியிலுமே எமது ஜனநாயக செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியிருக்கின்றது.


தற்போது தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. கடந்த காலங்களில் காணப்பட்ட அரசாங்கங்களுடனும் தற்போது உள்ள புதிய அரசாங்கத்துடனும் போரால் பாதிக்கப் பட்ட மக்களின் உடனடிப் பிரச்சினைகள், அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறிதல், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிப்பு, மீள்குடியேற்றம், அரச அதிபர்களின் இடம் மாற்றம் உட்பட நிரந்தர தீர்வு குறித்தும், பேசப்பட்ட போதும் அதில் ஆக்கபூர்வமான முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை.

ஆகவே தற்போது தமிழ் மக்கள் தமது உரிமைகளையும், அபிலாஷைகளையும் வென்றெடுப்பதற்காக தென்னிலங்கைக்கும், சர்வதேச சமூகத்துக்கும் இனப்பிரச்சினை தொடர்பில் செய்தியொன்றை அறிவிக்கவேண்டிய தீர்க்கமான தருணமொன்று ஏற்பட்டுள்ளது. பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்துவதன் ஊடாகவே மக்கள் தமக்கான இலக்குகளை இலகுவாக அடைய முடியும் என்பதே யதார்த்தமாகும்.

எனவே, எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்குக் கிழக்குத் தாயகத்தில் வாழும் தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டு தமக்குள்ள ஜனநாயக பலமான வாக்குகளை தமிழ் தேசியக் கூட்டமைப்புக் அளிப்பதனூடாக அந்த இலக்கை எட்ட முடியும்என்று அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்தார். (இ-7)



கிளிநொச்சி மாவட்ட கற்பகதரு வீட்டுத்தோட்ட மானியத் திட்டத்தின் கீழ் தெங்கு பயிர்ச்செய்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் ஊடாக கனகபுரம் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் அ.கனகரத்தினத்திடம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டு கனகபுரம் பகுதியைச் சேர்ந்த பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்:-சிவநகர் செய்தியாளர்)







கிளிநொச்சி மாவட்டத்தில் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துதல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்தி செவரத்ன தலைமையில் தர்மபுரம் பொலிஸ் காரியாலயத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு நடவடிக்கையில் தர்மபுரம், கண்டாவளை, புளியம்பொக்கணை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர். (இ-9-282)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கலை இலக்கிய போட்டி முடிபுகள்-2015

## பருத்தித்துறை பிரதேச செயலகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கியப் போட்டி முடிபுகள்-2015 இன் விபரங்கள் வருமாறு,

**பாடசாலை மட்டம்-சிரேஷ்ட பிரிவு-கவிதை எழுதுதல்**

1ம் இடம் பு.பிரியவர்ணா-யா/வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.

2ம் இடம் அ.சுயன்ராஜ்-யா/ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை.

3ம் இடம் ந.நிவியா-யா/வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை.

**சிரேஷ்ட பிரிவு-கட்டுரைப்போட்டி**

1ம் இடம் ம.துஷாந்தினி-யா/வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை.

2ம் இடம் பா.கீர்த்தனா-யா/சிதம்பராக் கல்லூரி வல்வெட்டித்துறை.

2ம் இடம் இ.ரேகலா-யா/வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.

3ம் இடம் ர.ஜதுர்ஷா-யா/புற்றளை மகா வித்தியா லயம்.

**சிரேஷ்ட பிரிவு-பாடல் போட்டி**

1ம் இடம் சி.சங்கவி-யா/வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை.

2ம் இடம் வி.றதன்-யா/புலோலி மெ.மி.த.க.பாடசாலை.

3ம் இடம் வி.சுதர்சினி-யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.

3ம் இடம் பி.தீபிகா-யா/வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை.

**கனிஷ்ட பிரிவு-கவிதை எழுதுதல்**

1ம் இடம் சி.குபேனன்-யா/ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை

2ம் இடம் ஜெ.நிலவன்-யா/ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை

3ம் இடம் சி.அஜீபா-யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்.

**கனிஷ்ட பிரிவு-கட்டுரைப்போட்டி**

1ம் இடம் இ.ருக்சியா-யா/புற்றளை மகா வித்தியாலயம்.

2ம் இடம் இ.தாரணி-யா/புற்றளை மகா வித்தியாலயம்.

3ம் இடம் கு.நர்மதா-யா/வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை.

**கனிஷ்ட பிரிவு-பாடல் போட்டி**

1ம் இடம் கெ.வினிதா-யா/வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை.

2ம் இடம் வி.மணிகண்டன்-யா/புற்றளை மகா வித்தியாலயம்

2ம் இடம் வ.தரணிகா-யா/வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை

3ம் இடம் இ.றஞ்சித்-யா/புலோலி மெ.மி.த.க.பாடசாலை.

**பாலர் பிரிவு-பாடல்போட்டி**

1ம் இடம் கி.யதுஷிகா-யா/புற்றளை மகா வித்தியாலயம்

2ம் இடம் பி.தர்மிகா-யா/புற்றளை மகா வித்தியாலயம்

3ம் இடம் ப.திருமால் யா/புற்றளை மகா வித்தியாலயம்

**பாலர் பிரிவு-உறுப்பெழுத்துப்போட்டி**

1ம் இடம் ஜெ.நிலாணி-யா பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்

2ம் இடம் யோ.யொனிசா-யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை

3ம் இடம் க.விதுஷா-யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா.வித்

**திறந்த பிரிவு-பாடல் ஆக்கப்போட்டி**

1ம் இடம் பா.வேதநாயகம்-தும்பளைதெற்குபருத்தித்துறை.

1ம் இடம் க.முருகதாஸ்-ஆலடி பொலிகண்டி கிழக்கு

2ம் இடம் இ.திருத்துவராசா-றோஸ்பவனம் அல்வாய் வட மேற்கு

3ம் இடம் மு.தணிகாசலம்-கற்கோவளம் பருத்தித் துறை.

**திறந்த பிரிவு-நாட்டார் கலை கற்றல் போட்டி**

1ம் இடம் இ.சச்சிதானந்தம்-எல்லைஒழுங்கைதும்பளை

2ம் இடம் பா.வேத நாயகம்-தும்பளை தெற்கு பருத்தித்துறை

3ம் இடம் செல்வி பா.மதனரூபி-மஹாத்மா வீதி அல்வாய் வடக்கு

**திறந்த பிரிவு-விபரணப்போட்டி**

1ம் இடம் க.முருகதாஸ்-ஆலடி பொலிகண்டி கிழக்கு

2ம் இடம் ஆ.முல்லைத்திவ்யன்-கொற்றன்தறை பொலிகண்டி கிழக்கு

3ம் இடம் செல்வி பா.மதனரூபி-மஹாத்மா வீதி அல்வாய் வடக்கு.

**திறந்த பிரிவு - சிறுகதைப் போட்டி**

1ம் இடம் சி.மார்க்கண்டு-தும்பளை தெற்கு

2ம் இடம் இ.சச்சிதானந்தம்-எல்லை ஒழுங்கை தும்பளை

3ம் இடம் பா.வேதநாயகம்-தும்பளை தெற்கு பருத்தித்துறை.

**திறந்த பிரிவு-கவிதைப்போட்டி**

1ம் இடம் பா.வேதநாயகம்-தும்பளைதெற்குபருத்தித்துறை

2ம் இடம் இ.திருத்துவராசா-றோஸ்பவனம் அல்வாய் வடமேற்கு

3ம் இடம் சி.மார்க்கண்டு-தும்பளை தெற்கு

**திறந்த பிரிவு-சிறுவர் கதை ஆக்கப்போட்டி**

1ம் இடம் இ.சச்சிதானந்தம்-எல்லை ஒழுங்கை தும்பளை

2ம் இடம் செல்வி பா.மதனரூபி-மஹாத்மா வீதி அல்வாய் வடக்கு

3ம் இடம் பா.வேதநாயகம்-தும்பளை தெற்குபருத்தித்துறை என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ-3)

## கரவெட்டி பிரதேச செயலகம்

கரவெட்டி கலாசார அலுவல்கள்திணைக்களமும் கர வெட்டி பிரதேசசெயலகமும்இணைந்து நடத் திய பிரதேச மட்ட கலை இலக்கியப் போட்டி முடிவுகள் விப ரம் வருமாறு,

**பாலர் பிரிவு - கவிதைப் பாடல்**

1ஆம் இடம் சு.தேவதிவான் யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்,2ஆம் இடம் க.பரணிகா யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம், 3ஆம் இடம் வி. நந்திகா யா/ மாணிக்க வாசகர் வித்தியா லயம்.

**கையெழுத்துப் போட்டி**

1ஆம் இடம் கு.தாட்சாயினி யா/நெல்லியடி மெ.மி.த. க பாடசாலை, 2 ஆம் இடம் நா.சுபாஹரி யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி,3 ஆம் இடம் சு.வர்ஷணா யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை

**கனிஷ்ட பிரிவு - கவிதைப் போட்டி**

1 ஆம் இடம் இ.ஷாந்விகா யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி,2 ஆம் இடம் ஸ்ரீ.ஜஸ்மிகா யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி,3 ஆம் இடம் ர.மிருத்திகா யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**கட்டுரைப் போட்டி**

1 ஆம் இடம் சி.கஜலக்ஷன் யா/விக்னேஸ்வரா கல்லூரி,2 ஆம் இடம் யோ.சயந்தனா யா/விக்னேஸ்வரா கல்லூரி,3 ஆம் இடம் ர.சாருஜா யா/உடுப்பிட்டி மகளிர் கல் லூரி

**கவிதைப்பாடல்**

1ஆம் இடம் தி.வைஷ்ணவி யா/வடமராட்சி மத்திய ம.கல்லூரி, 2 ஆம் இடம் பே.விந்தியா யா/வடமராட்சி மத்திய ம.கல்லூரி, 3 ஆம் இடம் ர.விதுர்ஷனன் யா/விக்கினேஸ் வரா கல்லூரி

**சிரேஷ்ட பிரிவு-கவிதைப் போட்டி**

1 ஆம் இடம் ச.மீனலோசினி-யா/வடமராட்சி மத்திய ம. கல்லூரி, 2 ஆம் இடம் கௌ. தமிழ்நிலா யா/வடமராட்சி மத்திய ம.கல்லூரி, 3ஆம் இடம் ஜெ.விதுர்ஷா யா/விக்னேஸ்வரா கல்லூரி.

**கட்டுரைப்போட்டி**

1ஆம் இடம் ச.மதுசாளினி யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம் ப.தரங்கினி-யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, 3ஆம் இடம் சி.தேவிகா யா/நெல்லியடி மத்திய கல்லூரி

**கவிதைப் பாடல்**

1 ஆம் இடம் ஜெ.லாவண்யா யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம் கு.கௌரிபாலன் யா/நெல்லியடி மத்திய கல்லூரி, 3 ஆம் இடம் வி.கயந்தினி யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

**பாடல் நயத்தல் போட்டி**

1 ஆம் இடம் ப.ஷஜீபா யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம் கு.மிதுர்சினி யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, 3 ஆம் இடம் ம.கிருஷாந்தினி யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**திறந்த பிரிவு - பாடல் ஆக்கப் போட்டி**

1 ஆம் இடம் க.ஸ்ரீரங்கநாதன் கந்தவணம் வாசா நெல்லியடி, 2 ஆம் இடம் வ.பத்தினிப்பிள்ளை துன்னாலை மத்தி கரவெட்டி, 3 ஆம் இடம் நா.ஆனந்தராணி வீரபாலன் தோட்டம் கரவெட்டி, 3 ஆம் இடம் சி.கௌராசசிங்கம் சந்திரோதயம் வதிரி கரவெட்டி

**நாட்டார் கலை கற்றல் போட்டி**

1 ஆம் இடம் மா.அனந்தராசன் அல்வாய்,2 ஆம் இடம் சி.செகராசசிங்கம் சந்திரோதயம் வதிரி, கரவெட்டி, 3 ஆம் இடம் க.பாலன் இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

**விபரணப் போட்டி**

1 ஆம் இடம் த.அஜந்தகுமார் துன்னாலை கிழக்கு கரவெட்டி, 2 ஆம் இடம் கெ.சுவர்ணலதா கரவெட்டி மத்தி கரவெட்டி, 3 ஆம் இடம் வ.பத்தினிப்பிள்ளை துன்னாலை மத்தி கரவெட்டி.

**சிறுகதைப் போட்டி**

1 ஆம் இடம் மா.அனந்தராசன் அல்வாய், 2 ஆம் இடம் ஆ.இந்திராதேவி வதிரி, கரவெட்டி, 3 ஆம் இடம் சி.ஜெயசங்கர் துன்னாலை மத்தி கரவெட்டி.

**கவிதைப் போட்டி**

1 ஆம் இடம் த.அஜந்தகுமார் துன்னாலை கிழக்கு கரவெட்டி,2 ஆம் இடம் கெ. சுவர்ணலதா கரவெட்டி மத்தி கரவெட்டி, 3 ஆம் இடம் ந.பாக்கியநாதன் இமையாணன் கிழக்கு உடுப் பிட்டி

**சிறுவர் கதைப் போட்டி**

1 ஆம் இடம் நா.ஆனந்தராணி வீரபாலன் தோட்டம் கரவெட்டி, 2 ஆம் இடம் சி.செகராசசிங்கம் வதிரி, கரவெட்டி, 3ஆம் இடம் கெ.சுவர் ணலதா கரவெட்டி மத்தி கரவெட்டி

**கவிதைப்போட்டி**

1 ஆம் இடம் சி.ஜெயசங்கர் துன்னாலை மத்தி கர வெட்டி (3-60)

# வேட்பு மனுக்கள் இன்றுமுதல் ஏற்பு

2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடம்பெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பான வேட்புமனுக்கள் இன்று முதல் ஏற்றுக்கொள்ளப்பட வுள் ளன.

எதிர்வரும் 13ஆம் திகதி வரை இந்த வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

ஏற்கனவே பல சுயேட்சை குழுக்கள் பொதுத்தேர்தலுக்காக தமது கட்டுப்பணங்களை செலுத்தியுள்ள நிலையில், பல அரசியல் கட்சிகள் தனித்தும் இன்னும் பல கட்சிகள் பிரதான கட்சிகளுடன் இணைந்தும் போட்டியிடவுள்ளன.

இதேவேளை ஒரு கட்சி இன்னும் ஒரு கட்சிக்காக போட்டியிடுவது தடுக்கப்படும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.(இ-7)

# பொதுத் தேர்தலில் போட்டியிடவில்லை

## அஜித் நிவாட் கப்ரால் தெரிவிப்பு

(கொழும்பு)

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் தாம் போட்டியிடப்போவதில்லை என்று மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.**



எதிர்வரும் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் திறமையான வேட்பாளர்கள் உள்ளனர்.

எனவே அவர்களில் இருந்து பிரதிநிதிகளை தெரிவு செய்ய முடியும் என்று கப்ரால் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்தவின் நிர்வாகத்தின் கீழ் கடமையாற்ற தாம் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# நிர்வாக சபைத் தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் சனசமூக நிலைய புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

சனசமூக நிலையத் தலைவராக சி.செல்வராசா, செயலாளராக வே. கிருஸ்ணன், உபதலைவராக ஆ.யசோதரன், உப செயலாளராக த.கஸ்ரோ, பொருளாளராக த.முரளிதரன், நூல் நிலையச் செயலாளராக ம.வறோயன், கலைக்கழகச் செயலாளராக அ.இராசலிங்கம், விளையாட்டுக்கழகச் செயலாளராக த.சிவசன்னா மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் 5 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-3)

# 14 இலட்சம் பெறுமதியான தங்க நகைகள் திருட்டு!

(கரணவாய்)

பருத்தித்துறை கடற்கரை கொட்டடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து சுமார் 35 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

சுமார் 14 இலட்சம் ரூபா பெறுமதியான மேற்படி நகைகள் நேற்று முன்தினம் திருட்டுப் போயிருப்பதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு 9 மணிக்கும் அதிகாலை 5 மணிக்குமிடையில் இந்தத் திருட்டு நடைபெற்றிருப்பதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-3-60)

# மாணவியை காணவில்லை

கல்முனை பகுதியில் வைத்து மாணவி ஒருவர் காணாமற் போயுள்ளதாக கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் கல்முனை வைத்தியசாலைக்கு சென்ற மாணவியே இவ்வாறு காணாமற் போயுள்ளதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்மாந்துறை போரக் கோயில் தமிழ் மகா வித்தியாலயத்தில் உயர் தரம் கற்கும் ஜோசப் காஞ்சனா (வயது 17) என்ற மாணவியே காணாமற் போயுள்ளதாக அவரது தாய் முறைப்பாட்டில் தெரிவித்துள் ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# தேவதைகள் சொன்ன இரகசியம்!

ஓர் ஊரில் அண்ணன், தம்பி இருவர். அண்ணன் நேர்மையற்றவன். குறுக்கு வழியில் தான் சிந்திப்பான். தம்பி மிக மிக நேர்மையானவன்.

அவர்களின் தந்தை இறந்த பின்பு சொத்துக்களைப் பிரித்தனர். அப்போது தம்பியை ஏமாற்றி, எல்லாச் சொத்துக்களையும் பறித்துக்கொண்ட அண்ணன், தம்பியை வீட்டை விட்டுவிரட்டி னான்.





பல இடங்களில் வேலை தேடி னான தம்பி. ஏதும் கிடைக்கவில்லை. ஊருக்கு அருகில் இருந்த காட்டுக்குள் கால்போன போக்கில் போனான்.

தான் இனி உயிரோடு வாழ்வதில் பயனில்லை என்று நினைத்து, இறந்துவிட முடிவு செய்தான்.

ஒரு மரத்தடியில் நின்றபோது, திடீரென எங்கிருந்தோ ஓர் ஓநாய் ஆவேசமாக ஓடிவந்தது.

என்னதான் இறக்க முடிவு செய்தாலும் ஓநாயைப் பார்த்ததும் நடுங்கிப்போய், மரத்தின் மீது ஏறிக்கொண்டான்.

மரத்தில் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தவன், அப்படியே தூங்கி விட்டான்.

கண் விழித்துப் பார்த்தபோது, கீழே நான்கு தேவதைகள் உட்கார்ந்திருந்தனர்.

அவர்கள் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டிருந்தனர்.

மூச்சுக் காற்றுகூட அவர்களுக்கு கேட்காதவாறு உட்கார்ந்திருந்தான் தம்பி.

முதலாவது தேவதை சொன்னது, "பக்கத்து ஊரில் இருந்த பெரிய குளம் உடைந்துவிட்டது.

விவசாயிகள் செய்வதறியாமல் தவிக்கிறார்கள்."

உடனே தலைமைத் தேவதையைப் போலிருந்த தேவதை, அதற்குப் பதில் சொன்னது.

"அது ஒன்றும் பெரிய விஷயமல்ல. அந்தக் குளத்தின் தெற்குப் புறமாக இருக்கும் புளிய மரத்தை வெட்டி, உடைப்பில் போட்டால் அடைத்துவிடலாம்" என்றது.

பிறகு இரண்டாவது தேவதை, "நானும் ஒரு மோசமான செய்தியை வைத்திருக்கிறேன். தெற்குப் பக்கம் இருக்கும் ஊரில், கடுமையான தண்ணீர் பஞ்சம் நிலவுகிறது.

மக்கள், குடிநீருக்காக 30 மைல் நடந்துபோய் தண்ணீர் கொண்டுவருகிறார்கள்" என்றது.

உடனே தலைமைத் தேவதை, "அந்த ஊரில் மல்லிகைப் புதர் ஒன்று இருக்கிறது.

அந்தப் புதரை அகற்றிவிட்டு, ஐந்து அடி தோண்டினால் தண்ணீர் ஊற்றெடுக்கும். அது வற்றவே வற்றாது" என்றது.

அடுத்ததாக மூன்றாவது தேவதை, "என்னிடமும் ஒரு கெட்ட செய்தி இருக்கிறது.

இந்த நாட்டின் இளவரசி விசித்திரமான நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறாள்.

அவளைப் பிழைக்கவைத்தால், மன்னர் நாட்டையே கொடுக்கத் தயாராக இருக்கிறார்" என்றது.

"அது ஒன்றும் பெரிய காரியமில்லை.

வெட்டிவேரை எரித்து, அதன் புகையை அவளை சுவாசிக்கச் செய்தால், அந்த நோயிலிருந்து விடுபடுவாள்" என்ற தலைமைத் தேவதை, "இதெல்லாம் தேவதைகளுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். யாருக்கும் சொல்லக் கூடாது" என்றது.

தேவதைகள் சென்ற பிறகு, மரத்தைவிட்டுக் கீழே இறங்கிய தம்பி, அடுத்த ஊருக்குப் போனான.

அங்கே தேவதைகள் சொன்னதுபோலவே, குளம் உடைந்து போயிருந்தது.

ஊர் மக்கள் எல்லோரும் மண்ணைக் கொட்டி குளத்தை அடைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள்.

உடனே தம்பி, அந்த ஊர்ப் பெரியவரைப் பார்த்து, "இந்த உடைப்பை அடைக்கும் வழி எனக்குத் தெரியும்" என்றான்.

பெரியவர், "நீ மட்டும் குளத்தை அடைக்கும் சரியான வழியைச் சொல்லிவிட்டால், உனக்கு ஒரு குதிரையும் தேவையான அளவுக்குப் பணமும் பரிசாகத் தருகிறேன" என்றார்.

## 07.2015 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1044 - புனித உரோமப் பேரரசின் மூன்றாம் ஹென்றி ஹங்கேரி மீது படையெடுத்தான்.
- 1189 - முதலாம் ரிச்சார்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1483 - மூன்றாம் ரிச்சார்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.
- 1484 - போர்த்துக்கீச மாலுமி டியாகோ காவோ கொங்கோ ஆற்றின் வாயிலைக் கண்டான்.
- 1535 - சேர் தோமஸ் மோர் நாட்டுத் துரோகத்துக்காக இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியினால் தூக்கிலிடப்பட்டார்.
- 1560 - ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் எடின்பரோ ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.
- 1785 - டொலர் ஐக்கிய அமெரிக்காவின் நாணய அலகாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 1854 - ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுக் கட்சியின் முதலாவது மாநாடு மிச்சிகனில் நடைபெற்றது.
- 1885 - பிரெஞ்சு வேதியியலாளர் லூயி பாஸ்டர் தான் கண்டுபிடித்த தடுப்பூசி மருந்தை விசர் நாய் ஒன்றினால் கடிபட்ட 9 வயது யோசப் மைசிட்டர் என்ற சிறுவனில் வெற்றிகரமாகச் சோதனை செய்தார்.
- 1892 - தாதாபாய் நெளரோஜி பிரித்தானிய நாடாளுமன்றத்தின் முதலாவது இந்தியப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1893 - அயோவாவின் பொமெரோய் நகரில் நிகழ்ந்த சூறாவளியினால் 71 பேர் கொல்லப்பட்டனர்.
- 1908 - ரொபேர்ட் பியரி ஆர்க்டிக்குக்கான தனது பயணத்தை ஆரம்பித்தார். இப்பயணத்தில் அவர் வட முனையை அடைந்தார்.
- 1935 - சிங்கப்பூரின் தமிழ் நாளிதழ் தமிழ் முரசு ஆரம்பிக்கப்பட்டது.
- 1939 - ஜேர்மனியில் இருந்த கடைசி யூத தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்பட்டன.
- 1944 - கனெக்டிகட்டில் கழைக்கூத்து அரங்கில் இடம்பெற்ற பெரும் தீயில் சிக்கிய 168 பேர் கொல்லப்பட்டனர்.
- 1947 - சோவியத் ஒன்றியம் ஏகே-47 துப்பாக்கிகளை தயாரிக்க ஆரம்பித்தது.
- 1956 - சிங்களம் இலங்கையின் அதிகாரபூர்வ மொழியானது.
- 1964 - மலாவி ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1966 - மலாவி குடியரசாகியது.
- 1967 - நைஜீரியப் படையினர் பயாஃப்ராவினுள் நுழை ந்து போரை ஆரம்பித்தனர்.
- 1975 - கொமொரோஸ் பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 2005 - லண்டன் நகரம் 2012ம் ஆண்டின் ஒலிம்பிக் விளையாட்டுகளை நடத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 2006 - 44 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தோ-சீனப் போரின் போது மூடப்பட்ட சிக்கிமையும் திபெத்தையும் இணைக்கும் நது லா பாலம் மீண்டும் திறக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1832 - முதலாம் மாக்சிமிலியன், மெக்சிக்கோவின் மன்னர் (இ. 1864)
- 1870 - பரிதிமாற் கலைஞர், தமிழறிஞர் (இ. 1903)
- 1946 - ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், ஐக்கிய அமெரிக்காவின் 43ஆவது ஜனாதிபதி
- 1946 - சில்வெஸ்ரர் ஸ்ரலோன், அமெரிக்கத் திரைப்பட நடிகர்
- 1980 - பாவ் கசோல், எசுப்பானிய கூடைப்பந்து ஆட்டக்காரர

### இறப்புகள்

- 1893 - மாப்பசான், பிரெஞ்சு எழுத்தாளர் (பி. 1850)
- 1991 - என். ஆர். சின்னராசா, ஈழத்தின் தவில் மேதை (பி. 1934)
- 1991 - கோவை மகேசன், ஈழத்து எழுத்தாளர், பத்திரிகையாளர் (பி. 1938)
- 2002 - திருபாய் அம்பானி, இந்தியத் தொழிலதிபர் (பி. 1932)
- 2005 - கிளோட் சைமன், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (பி. 1913)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

…அதை மனதில் கொண்டு, மேலும் மேலும் ஆழமாகப் புரிந்து கொள்ளுதலை நோக்கி உங்களை எடுத்துச் செல்லும் விழிப்புணர்வை தொடர்ந்து போஷித்து வாருங்கள்.


ஒரு விசயத்தைப் புரிந்து கொள்ளுங்கள்… ஒரு குருநாதரின் வேலை மிகவும் நுட்பமானது. அவர் உங்கள் ஒவருவரையும் உச்ச பட்ச அக்கறையுடனும் நுட்பமாகவும் கையாள வேண்டும். அவர் உங்கள் ஒவ்வொருவருக்கும் வளர்வதற்கு ஏற்ற வழி எதுவென்று பார்த்து, உங்களை அவ்வழியில் மலர வைக்க வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் பல வழிகளைக் கடந்து வந்திருக்கிறீர்கள்; அந்த அளவிற்கு அறியாமையையும் சேகரித்து வைத்திருக்கிறீர்கள். அவர் இவற்றின் மீதெல்லாம் செயற்பட்டு உங்களளை உறக்கத்திலிருந்த எழுப்ப வேண்டும். மேலும் ஒரு விசயத்தை நிளைவில் வையுங்கள்… வாழ்க்கை ஏராளமான தீர்வுகளை வழங்கத் தயாராக இருக்கிறது; ஆனால் எப்பொழுதுமே ஏதோ ஒன்று உங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறது. அதைக் கண்டு பிடிப்பதில்தான் உங்கள் அறிவுக் கூர்மை அடங்கியிக்கிறது. நீங்கள் உங்கள் சொந்த அறிவுக் கூர்மையால் அதைக் கண்டு பிடித்தீர்களானால் அதன் பயன்களை, அனுபவிப்பீர்கள். ஆனால் மற்றவர்களைப் பார்த்து, அவர்களுடைய தீர்வுகளை உங்களுக்கு உபயோகப்படுத்த தொடங்கினீர்களானால், நீங்கள் எங்கு நிற்கிறிர்கள் என்பதே தெரியாமல் பாதையைத் தவற விட்டுவிடுவீர்கள்.

**ஆன்மீகம் 231**

## பொறாமையிலிருந்து விடுதலை!

ஒரு சின்னக் கதை…

ஒரு வயதான பெண்மணி, தொலை தூரக் கிராமத்தில் உள்ள அவளுடைய பழைய வீட்டை தூசி தட்டிக் கொண்டிருந்தாள். அப்பொழுது திடீரென்று கதவு திறந்து கொள்ள, ஒரு இளம் விற்பனையாளன் உள்ளே வந்தான் அவள் தூசி தட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்து அவன் பரபரப்புடன் பேசினான்.



அவனிடம் பல கருவிகள் இருப்பதாகவும், அவை அவளுக்கு வீட்டை சுத்தம் செய்ய உதவியாக இருக்கும் என்றும் சொன்னான். அந்த வயதான பெண்மணி சொன்னாள், "ஆனால்…" அவன் அவளை இடைமறித்து, ஒரு பையிலிருந்து நிறைய குப்பை கூளங்களை எடுத்து தரையில் கொட்டினான். வயதான பெண்மணி மீண்டும் முயற்சித்தாள் "ஆனால்.." அவன் அவளிடம் அருகே நின்று கவனிக்கச் சொன்னான்.


ஒரு கருவியை வெளியே எடுத்து விளக்கினான், "இந்தக் கருவியைப் பார்க்கிறீர்களா? இது எவ்வளவு தூசியிருந்தாலும் ஒரு நொடியில் சுத்தம் செய்துவிடும். இது மிகவும் எடை குறைவாக இருப்பதால், உங்களுக்கு இந்த வயதில் கையாள்வதற்கும் மிகவும் சுலபமாக இருக்கம். நான் செய்முறையைக் காட்டுகிறேன்." வயதான பெண்மணி முயற்சித்தாள், "ஆனால்…" அவன் இடைமறித்தான், "சற்று ப்ளக் பாயின்டைக் காட்டுங்கள்." இறுதியாக அந்தப் பெண்மணி சொன்னாள். "ஆனால்… இன்னும் எங்கள் கிராமத்திற்கு மின்சாரம் வரவில்லை!."

(பலத்த சிரிப்பு)

வாழ்க்கையில் நமக்கு எது சரியாக பொருந்துகிறது என்பதை நம்மால் கணிக்க இயல வேண்டும்! இதில் நாம் தெளிவாக இருந்தால், கவலையின்றி வளரலாம். ஆனால் பல சமயங்களில், நாம் மற்றவர்களுடைய தீர்வக்கு ஆசைப்பட்டு, அதை நமக்கு உபயோகித்து விட்டு, பின்னர் வருத்தப் படுகிறோம்.

நாம் எங்கு நிற்கின்றோம், நமக்கு என்ன தேவை, என்பதில் நாம் தெளிவாக இருந்த்ால் நம்மால் நிலையாக முன்னேற முடியும். (தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**



# கருவாச்சி காவியம்

**வைரமுத்து–179**

…தான் தின்ட எலும்பையும் எச்சிஎலயில போட்டு எடுத்தெறிஞ்சுட்டு, வாய் கொப்புளிச்சுக் கைகால் கழுவி, சீலய அவுத்துச் செவக்கிக் கட்டிக்கிட்டு, ஒரு எட்டு உள்ள போயிக் கண்ணாடியும் பாத்துட்டுக் கதவத் தொறந்து வச்சா; உள்ள வந்தா; பொணத்த பொத்துன சாக்க எடுத்து எறிஞ்சா.

"பெரிய மாமு… எங்கள ஏச்சுட்டுப் போயிட்டீகளே" பெருங்கொடல நெஞ்சுக்கேத்தி ஒரு பெருஞ்சத்தம் போட்டா பாருங்க.

சடையத்தேவன் செத்துப் போயிட்டார்னு ஊருக்கே சங்கு ஊதிச் சொன்ன மாதிரி இருந்துச்சு.

ஆடு கோழி செத்தாலும் ஓடி வந்து விசாரிக்கிற ஊருச் சனம் 'பொணம் தூக்கட்டும் போவம்'ன்னு பதறாம வருது.

ஊரக் காலி பண்ணிட்டுப் பல வீட்டாளுக பஞ்சம் பொழைக்கப் போயிட்டாக. எண்ணி எழுவது ஆளுதான் வந்திருக்கு எழவு வீட்டுக்கு.

"யப்பா! காலம் பஞ்சகாலமா இருக்கு. காக்கா உக்கார மரமில்ல; கன்டுக்குட்டி குடிக்க தண்ணியுமில்ல; அதனால கொட்டு வேணாம்; கொலவை வேணாம்; பட்டாசு வேணாம்; பாடை வேணாம், கட்டிலோட தூக்குங்கப்பா; காரியத்த முடிச்சப்புட்ட வந்திரலாம்."

"நியாயமான பேச்சு"ன்னாக எல்லாரும்.



"பெத்த அப்பன் செத்துக் கெடக்கான். கதவச் சாத்திட்டுப் படுத்துக் கெடக்கானே க்ட்டையன். கூப்பிடுங்கப்பா அவன."

"வேணாமடா ஏலே! மப்புல கெடக்குறவன் நிக்க மாட்டான். அவக அப்பனத் தூக்க நாலாள் போதும்; அவனைத் தூக்க எட்டாள் வேணும்; விடுங்கடா."

இடுகாட்ல கட்டிலோட ஏறக்குனாக பொணத்த. "நாலடிக்குழி நல்லாத் தோண்டுங்கப்பா; நரி மண்ணப் பறிச்சு ஈரலப் புடுங்கித் தின்டாலும் தின்டுபுடும்."

"ஆமா! இருதயம் இல்லாத கெழவனுக்கு ஈரலா இருக்கப் போகுது? ரெண்டடிக் குழி போதுமப்பா"

கால்ல ஒட்டுன இடுகாட்டுப் புழுதியைக் கழுவக் கூடத் தண்ணியில்ல! ஆவாரங்குழாயப் புடுங்கி அரைகொறையாக் கால் தொடச்சுக் கிட்டாச்சு.

இடுகாட்டுலருந்து திரும்பி வந்த பெருசுக 'முப்பதாம் நாள் காரியம்'ன்னு தோட்டியக் கூப்பிட்டுச் சொல்லிக்கிட்டிருக்க-திம்சு ஊர்மாடு மேய்க்கிறவன உள்ள கூ ட்டிட்டுப் போயி அருவா மூக்கனுக்கு தகவல் சொல்லிவிடுறா:

"துட்டுச் சேத்து வைக்கச் சொல்லு அருவா மூக்கன. கட்டையன் வீடு, சடையத்தேவன் காடு கருவாச்சி வீடு மூணும் பத்திரம் முடிக்கிறோம் மூணே மாசத்துல."

மூணுமாசத்துக்கு மேல கட்டையன் தாங்க மாட்டான்; ஆளு அடியாகிப்போயிருவான்ங்கறது அவ கணக்கு.

தாது வருச பஞ்சத்துல சில்லாவே சீக்குல விழுந்து போச்சு. ஐப்பசி மாசக் குளிரு. ராத்திரி ஒறஞ்சு போச்சு; ஊர் ஒறங்கிப் போச்சு. வெடவெடங்குது ஒடம்பு; வெறைச்சுப் போச்சு கைகாலெல்லாம்.

வருசா வருசம் குளிரு கூடுதா… இல்ல வயசாக ஆக திரேகத்துல ரத்தஞ்செத்துப் போறதால குளிரு கூடுதலா ஒறைக்குதா? பழைய சீலக்குள்ள ஒடம்ப உருட்டி உள்ள போட்டு அதுக்கு மேல இத்த கம்பளியைப் பொத்திப் படுத்திருந்தா கருவாச்சி… (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணுக்காக குருதிசிந்தியோர் போற்றப்பட வேண்டியவர்களே

## வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன் தெரிவிப்பு


(யாழ்ப்பாணம்)

இந்த மண்ணுக்காகவும், எமது மக்களுக்காகவும் போராட்டத்தில் ஈடுபட்டு தம்முடலின் குருதியை சிந்தியவர்களும், பிறர் உயிரைக்காப்பாற்றுவதற்காக தாமாக முன்வந்து தமது உடலின் குருதியைத் தானமாகக் கொடுபவர்களும் ஒரே தரத்தினராக நோக்கப்பட்டு போற்றப்பட வேண்டியவர்களே என வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்துள்ளார்.

எனும் மனப்பான்மை, மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்து, அந்தமகிழ்ச்சியிலே தாமும் மன நிறைவடையும் இயல்பு என்பன மட்டுமல்ல இன்றும் எமது மக்களிடையே மனிதாபிமானம் அப்படியே இருக்கிறது என்பதைக்காட்டும் நிகழ்வாகவும் இது அமைந்திருக்கிறது.

இந்நிகழ்வில் 50 தடவைகள், 40 தடவைகள்,30 தடவைகள் குருதியை கொடையாக வழங்கியதன்மூலம் அடைந்திருக்கின்றார்கள். அந்த வகையில் நிஜக்கதாநாயகர்களான இவர்களை நாங்கள் வாழ்த்துவதோடு, இளைய தலைமுறையினர் குருதிக்கொடை தொடர்பான தவறான எண்ணங்களை விடுத்து இவர்களைப் பின்பற்றி குருதிக் கொடையாளர்களாக உருவெடுக்க வேண்டும். மருத்துவ ரீதியாக குருதிக் .கொடையினால்







உலக குருதிக்கொடையாளர் தினத்தை முன்னிட்டு அண்மையில் தெல்லிப்பழை புற்று நோய் பிரிவினரால், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்ட குருதிக்கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு மனிதனுடைய வாழ்வில் தவிர்க்க முடியாமல் சந்தித்தே ஆகவேண்டிய ஒன்றுமரணம். ஆனால் அந்த மரணத்தைக்கூட தற்காலிகமாக வேனும்தள்ளிப் போடுவதற்கு பேருதவி புரிகின்றவர்களாக குருதிக்கொடையாளர்கள் விளங்குகின்றார்கள். இன்னும் இந்தமண்ணில் மற்றவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என குருதிக் கொடை செய்த கொடையாளிகளின்முகங்களில்தான்எத்தனை பிரகாசம்! எத்தகைய பெரு மிதம்! எத்தனைமகிழ்ச்சி!

இதற்கு விலையில்லை. கோடிகள் கொடுத்தாலும் கிடைக்காத இப்பெருமிதத்தை அவர்கள் தமது எவ்வித தீங்குகளும் இல்லை. மேலும் சில விசேட நிலைகள் தவிர்த்து, 4 மாதங்களுக்கு ஒருமுறை இரத்ததானம் செய்வதற்கு ஒவ்வொருவரும் தகுதியுடையவர்களாவர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)



யாழ்.ஒஸ்மானியா கல்லூரியின் ஒரு பகுதியில் தற்காலிகமாக இயங்கும் கதீஜா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ரமழான் புனித குர்ஆன் போட்டி பரிசளிப்பின் போது யாழ்.எழுத்தாளர் அல்ஹாஜ் எம்.எப்.எம் இக்பால் (ஜே.பி) வெற்றி பெற்ற மாணவிக்கு பரிசு வழங்குவதை படத்தில் காணலாம்.

# தீவிர விசாரணைக்குள் பிரசன்ன ரணதுங்க!

பெருமளவு தரகுப்பணம் பெற்றுளளமை தொடர்பில் மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் மீது நிதிமோசடி தடுப்பு பொலிஸார் தீவிரமான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

64 மில்லியன் ரூபாய்கள் என்ற தரகுப்பணத்தை ரணதுங்க, 64 காசோலைகளை தரவேண்டும் என்று கோரியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த காசோலைகள் ரணதுங்கவின் மனைவி மொரின் பெயருக்கும் உறவினர் ஒருவரின் பெயருக்கும் மாற்றப்பட்டிருந்தன.

பாதுகாப்பு கமராக்களை இறக்குமதி செய்யும் சிலிக்கொன் டெக்னோலோஜிஸ் நிறுவன பணிப்பாளர் கெஹாட் மெண்டிஸ் என்பவர் வழங்கிய முறைப்பாட்டுக்கு இண



ங்கவே பிரசன்ன ரணதுங்கவின் மீது விசாரணைகள் தொடர்கின்றன்.

இதன் ஒருக்கட்டமாக முதலமைச்சரின் மனைவி மொரினிடம் கடந்த வியாழக்கிழமையன்று பொலிஸார் 7 மணித்தியாலங்களாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

கொலன்னாவையில் தமது வியாபாரத்துக்காக சிலிக்கொன் நிறுவனம் காணி ஒன்றை கொள்வனவு செய்தது.இதற்காக அந்த பிரதேசத்தில் உள்ள சட்டவிரோத குடியேறிகளை அகற்றுமாறு சிலிக்கொன் நிறுவனம் மாகாண சபையை கோரியது.

இதற்கு அமைய சட்டவிரோத குடியேறிகளை அங்கிருந்து அகற்ற முதலமைச்சர் உதவியுள்ளார். அத்துடன் குறித்த சொத்தை மாதம் ஒன்றுக்கு 2.25 மில்லியன் ரூபாய்களுக்கு குத்தகைக்கும் அவர் வழங்கியுள்ளார்.

இதற்கு கைமாறாக நிறுவ னத்தின் விற்பனையில் 32 வீத இலாபத்தை தமது சார்பில் தமது மனைவி மொரின் மற்றும் உறவினரின் பெயருக்கு வழங்க வேண்டும் என்று உடன்படிக்கையை முதலமைச்சர் நிறுவனத்துடன் செய்து கொண்டதாக குற்றம் சுமத்தபபட்டுள்ளது. (இ-7)

# முதிரை மரக் குற்றிகளுடன் இருவர் நேற்று கைதாகினர்

அனுமதிப் பத்திரமின்றி முதிரை மரக்குற்றிகளை சிறிய லொறியொன்றில் கொண்டு சென்றதாகக் கூறப்படும் இருவரை கந்தளாய் பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் முதிரை மரக்குற்றிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

லொறியின் சாரதியும் அவரின் உதவியாளருமே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)



கோப்பாய் மதுரம் கிட்ஸ் முன்பள்ளியில் அண்மையில் நடைபெற்ற மழலைகளுக்கான விளையாட்டு விழாவில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் சிறுவர்களின் நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் ரீதியாக பாரியளவில் பின்னடைவை கூட்டுறவுத்துறை எதிர்நோக்க வேண்டிவரும்

## அமைச்சர் ஐங்கரநேசன் எச்சரிக்கை

கூட்டுறவுச் சங்கங்கள் தனியார் துறையினருடன் சராசரியாக போட்டியிடவில்லை என்றால் தொழில் ரீதியாக பாரிய பின்னடைவை கூட்டுறவுத்துறை எதிர்நோக்க வேண்டி வரும் என வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கூட்டுறவு தின நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தல் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதமராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து உரையாற்றுகையில், ஆண்டுதோறும் ச்வதேசகூட்டுறவுதினம்ஜூலை மாதம் முதலாவது சனக்கிழமைகளில் கொண்டாடப்படுகின்றது. இந்த ஆண்டின் சர்வதேச கூட்டுறவு தினத்துக்கான கருப்பொருளாக சமத்துவம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மூன்றில் ஒரு பங்காக அங்கம் வகிக்கும் கூட்டுறவுத்துறை அமைப்புக்கள் இன்று நலிவடைந்த நிலையில் உள்ளன. உதவி கேட்கும் அமைப்புக்களாக இருக்கின்றன. இனி அவ்வாறான நிலை கூட்டுறவுத்துறையில் இருக்கக் கூடாது.

கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பாக 100 நாட்கள் வேலைத் திட்டம் ஒன்றை முன்வைத்திருந்தோம். அதில் கூட்டுறவு அமைப்புக்கள் தொடர்பான சகல தரவுகளையும் பெற்றுக் கொண்டுள்ளோம். அவற்றின் ஊடாக அபிவிருத்தியை எட்டுவதற்கான இலக்குகளை நிர்ணயித்து செயலாற்ற முடியும். அத்துடன்சட்ட ஏற்பாடுகள் இல்லாமல் கூட்டுறவல் மாற்றங்களை கொண்டுவர முடியாது. எனவே இந்த 100 நாட்கள் வேலைத்திட்டத்தில் நிதியச் சட்டத்தை தயாரித்து அதில் திருத்தங்களை மேற்கொண்டு சபையில் சமர்ப்பிக்க இருக்கின்றோம்.

கூட்டுறவு நிதியச் சட்டம் சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஆளுநரின் ஒப்புதல் பெறப்பட்டதும் கூட்டுறவு அமைப்பில் பாரிய மாற்றம் ஏற்படும் என நம்புகின்றேன். எல்லா தொழிலிற்றுறையினரையும் போல கூட்டுறவில் வேலை செய்யும் பணியாளர்கள் அனைவரும் தமது திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பலர் இதில் ஆர்வம் இல்லாத்வர்களாக இருக்கின்றார்கள். கூட்டுறவு பணியாளர்கள கண்டிப்பாக கூட்டுறவு தொடர்பான பயிற்சியை பூர்த்தி செயய வேண்டும். அதன ஊடாக கூட்டுறவு சங்கத்தை வினைத்திறனுடன் செயற்படுத்த முடியும். இப் பயிற்சி நெறிகள் மற்றும்கூட்டுறவு அபிவிருத்திகள் தொடாபாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிடம் பேசி சிறு சிறு மாற்றங்களை செய்வதற்கு திட்டமிட்டுள்ளோம்.

அந்த வகையில் அவற்றை நடைமுறைப்படுத்துவதன்ஊடாககூட்டுறவுதுறையை வினைத்திறனுடன் வளர்த்துக் கொள்ள முடியும்.

கூட்டுறவு துறையில் பாதிப்பு ஏற்படும் போது அது நேரடியாக பணியாளர்களை பாதிக்கும். அதன் ஊடாக பயனாளிகள் பாதிக்கப்படுவார்கள். அவ்வாறான தவறுகள் விரைவில் களையப்பட வேண்டும். கூட்டுறவு பணியாளர்கள் சொத்தடிமைகள் இல்லை என்பதை கூட்டுறவுத்துறை தலைவர்கள், நெறியாளர்கள் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும். அத்துடன்கூட்டுறவுஅமைப்புக்கள் பின்தங்கியதற்கு காரணம் கடந்த காலங்களில் கட்சி சார்ந்து இயங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் ஒரு காரணம் ஆகும். கூட்டுறவுத் துறையில் உள்ள சிலருக்கு அரசியல் அபிலாசைகள் இருக்கும் ஆனால எந்தவொரு கட்சியின் வளர்ச் சிக்காகவும் கூட்டுறவுத்துறை செயற்படக் கூடாது. கூட்டுறவு சங்கங்கள் சகல பொது மக்களுக்கும் பொதுவானது.எனவே கூட்டுறவு அமைப்புக்கள் அரசியல் கட்சிகளின் தொழிற்சங்கங்கள் போன்று இனிவரும் காலங்களில்செயற்படாமலபொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு அனைவரும் ஒற்றுமையுடன் ஒத்துழைக்கும் பட்சத்தில் எமது மாகாண சபையின் ஆட்சியில் கூட்டுறவு துறையை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 400 | 250 | 300 | 400 |
| தக்காளி | 120 | 100 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 110 | 100 | 100 | 80 |
| கரட் | 180 | 180 | 260 | 140 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 80 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 120 | 100 |
| பாகற்காய் | 140 | 140 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 120 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 160 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 60 | 80 |
| லீக்ஸ் | 120 | 180 | 200 | 120 |
| பீற்றூட் | 140 | 150 | 160 | 90 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 100 |
| முருங்கைக்காய் | 150 | 300 | 300 | 300 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 180 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 70 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 140 | 150 | 160 | 120 |
| வெங்காயப்பூ | 280 | 250 | 280 | 160 |
| முள்ளங்கி | 50 | 90 | 100 | 60 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 423

சுஜன் செல்வா




கிரிதரன் கிரி





சிவா கணேஸ்




பாய் வாமன்




அன்ரோ மெரீனா



அபி அபிதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவசரமாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னணி!

20 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படாது என்று கூறி வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிடிவாதம், கடந்த வெள்ளியன்று (26.06.2015) தகர்ந்துபோனது. நாடாளுமன்றத்தை கலைக்கும் வர்த்தமானிப் பிரகடனத்தில் கடந்த 26 ஆம் திகதி அவர் ஒப்பமிட்டிருந்தார்.

அதற்கு முதல்நாள், நடந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கூட, 20 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றாமல் ஜனாதிப்தி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தை கலைக்கமாட்டார் என்று திட்டவட்டமாக கூறியிருந்தார் அமைச்சர் ராஜித சேனாரத்ன.

ஏற்கனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இது பற்றிய வாக்குறுதிகளை பொது மேடைகளில் கொடுத்திருந்தார். ஆனால், கடந்த 26 ஆம் திகதி மாலையில் அவரால் அந்த பிடிவாதத்தை தொடரமுடியாது போனது. எப்படியும் நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலை நடத்தியாக வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது.

20ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை தகர்ந்துபோனது மட்டும் அதற்கு காரணமல்ல. 20ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றும் விடயத்தில் பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படவில்லை என்பது உண்மை.

ஏற்கனவே இதுபோலவே 19ஆவது திருத்தச்சட்டதை நிறைவேற்றும் விடயத்திலும் இழுபறிகளும் இணக்கப்பாடின்மையும் நீடித்திருந்தன. ஆனாலும், அதையெல்லாம் வெற்றிகரமாக சமாளித்து, மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரின் சூழ்ச்சிகளை எதிர்கொண்டு, 19 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றி காட்டினார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. ஆனால், 20ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவது ஒன்றும் அவருக்கு சுலபமான விடயமாக இருக்கவில்லை. இந்த விடயத்தில் பிரதான கட்சிகளுக்கிடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது மட்டுமன்றி, சிறு மற்றும் சிறுபான்மையினக் கட்சிகளை திருப்திப் படுத்துவதும் அவருக்கு முக்கியமான பிரச்சினையாக இருந்தது. இருந்தாலும், இந்தப் பிரச்சினையை தீர்த்துவைத்து, எப்படியும் 20 ஆவது திருத்தச்சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிவிடலாம் என்று நம்பினார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. இந்த நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க போன்றவர்களுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணைகள் அவரது கழுத்தை நெரித்துப் பிடிக்கத் தொடங்கியது.

ஜூலை 6 ஆம் திகதி நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவது உறுதியானது. ஆனால், அதற்கு முன்னர் 20ஆவது திருத்தச்சட்டத்தை விவாதிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

20ஆவது திருத்தச்சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டாலும், இரண்டு வாரங்கள் கழித்தே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கமுடியும். அதுவரை நம்பிக்கையில்லா பிரேரணையை ஒத்திவைக்க எதிர்க்கட்சியை இணங்க வைக்கும் முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. இந்த நிலையில், எப்படியும் நாடாளுமன்றம் கலைக்கப்படுவது உறுதியானது. ஆனால, எப்போது என்பதே குழப்பமான விடயமாக இருந்து வந்தது.

நாடாளுமன்றத்தை கலைக்கும் முடிவை எடுப்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடிந்தவரைக்கும் தாமதித்து பார்த்தார். எனினும், அவரால் ஒரு கட்டத்துக்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டது. அது உள்நாட்டு அழுத்தம் அல்ல. சர்வதேச அழுத்தம். அந்த அழுத்தமே நாடாளுமன்றக் கலைப்பு மற்றும் தேர்தல் திகதியை தீர்மானிப்பதில் தீர்க்கமான பங்கை வகித்தது.

இலங்கையில் அண்மைக் காலமாக சனிக்கிழமைகளில் தேர்தல் நடத்தும் ஒரு பாரம்பரியம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதனை மீறி, திங்கட்கிழமை தேர்தலை நடத்தும் முடிவை எடுத்தமைக்கும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை காலத்தில் தேர்தலை நடத்த முடிவு எடுத்தமைக்கும் இந்த சர்வதேச அழுத்தமே காரணம். இந்த அழுத்தம் இல்லையென்றால், நிச்சயமாக நாடாளுமன்ற தேர்தல் ஒரு சனிக்கிழமையிலேயே நடத்தப்பட்டிருக்கும். அதனையே தேர்தல்கள் ஆணையாளர் விரும்பியிருந்தார். அது குறித்து அரசாங்கத்துக்கும் அறிவித்திருந்தார்.

முன்னர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்கு ராசியான நாள் பார்த்து தேர்தல் நடத்தியிருந்தார். ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவ்வாறு ராசி பார்த்து தேர்தலை நடத்தும் ஒருவர் அல்ல. இருந்தாலும் அவர் திங்கட்கிழமையை தெரிவுசெய்ய இந்த சர்வதேச அழுத்தமே காரணம்.

நாடாளுமன்ற தேர்தலை ஒகஸ்ட் மாத இறுதியில் நடத்தவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எண்ணியிருந்தார். ஒகஸ்ட் இறுதி வாரத்தில் அல்லது செப்டெம்பர் முதல் வாரத்தில் தேர்தல் நடத்தினால், அது க.பொ.த. உயர்தரப் பரீட்சையை பாதிக்காது என்றும் கருதப்பட்டது.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை ஜூலை 6ஆம் திகதி விவாதிக்கப்படும் என்று முடிவான நிலையில், அதற்கு ஓரிரு நாட்கள் முன்னதாக நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டது. எனினும், ஜூன் 26ஆம் திகதி நள்ளிரவே ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டார். அவர் திட்டமிட்டதை விட சுமார் 10 நாட்களுக்கு முன்னரே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு சர்வதேச அழுத்தமே காரணம். அதற்கு ஜெனீவாவிலிருந்து கிடைத்த ஒரு தகவலே காரணம்.

போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஐ.நா. நடத்திய விசாரணைகளின் அறிக்கை ஒகஸ்ட் 21ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதே அந்த செய்தி. இந்த அறிக்கை வெளியாக முன்னரே தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருந்தது. காரணம், இந்த அறிக்கை வெளியானால், அது மஹிந்த ராஜபக்ஷ தரப்புக்கு சாதகமாகிவிடும் என்று கருதப்பட்டது.

ஒகஸ்ட் 21 ஆம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும் விசாரணை அறிக்கையின் பிரதி எந்த நேரத்திலும் வெளியில் கசிந்துவிடக்கூடும். எனவே, அதனை வைத்து மஹிந்த ராஜபக்ஷ தரப்பு ஆதாயம் அடைவதை தடுக்க வேண்டுமானால், ஒகஸ்ட் 21 ஆம் திகதிக்குக்கு முன்னர் நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும்.

அதேவேளை, நாடாளுமன்ற தேர்தலை நடத்துவதற்கும் சில விதிமுறைகள் உள்ளன. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டு 52 தொடக்கம் 65 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஒகஸ்ட் 17ஆம் திகதியே தேர்தல் திகதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றுதான், தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டு 52 ஆவது நாளாகும்.

இலங்கையில் இதுவரை நடந்த நாடாளுமன்ற தேர்தல்களிலேயே ஆகக் குறைந்த கால அவகாசத்துக்குள் நடத்தப்படும் தேர்தல் இதுவே. தேர்தல் நடத்தப்பட்டு நான்கு நாட்கள் கழித்து ஐ.நா. அறிக்கை ஜனாதிபதியின் கையில் கிடைக்கப் போகிறது. அதாவது, புதிய அரசாங்கம் பொறுப்பேற்கும் சூழலில், இந்த அறிக்கை கிடைக்கும்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30 ஆவது கூட்டத்தொடரிலேயே இந்த ஐ.நா. விசாரணை அறிக்கை அதிகாரபூர்வமாக வெளியிடப்படும். இந்தக் கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு முன்னதாக செப்டெம்பர் மாதம் புதிய அரசாங்கம் பதவியிலிருக்கும் என்று ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனுக்கும், அமெரிக்க இராஜாங்க செயலர் ஜோன் கெரிக்கும் வாக்குறுதி கொடுத்திருந்தார், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஐ.நா. விசாரணை அறிக்கை தொடர்பான தெளிவான பதிலை புதிய அரசாங்கம் அளிக்கவேண்டும் என்பதை சர்வதேச சமூகம் எதிர்பார்க்கிறது. அதற்காகவே செப்டெம்பரில் புதிய அரசாங்கம் பதவியிலிருக்க வேண்டும் என்று ஐ.நாவும் அமெரிக்காவும் எதிர்பார்ப்பை வெளியிட்டிருந்தன. அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலேயே நாடாளுமன்றத்தை கலைத்திருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அதேவேளை, ஜெனீவா கூட்டத் தொடர் செப்டெம்பர் 14 ஆம் திகதியே ஆரம்பமாகவுள்ள நிலையில், மைத்திரிபால சிறிசேன நினைத்திருந்தால், கொஞ்சம் தாமதமாகவேனும் நாடாளுமன்றத்தை கலைத்திருக்கலாம். ஆனால, ஒகஸ்ட் 21 ஆம் திகதி ஐ.நா. விசாரணை அறிக்கையின் ஒரு முன்னோட்டப் பிரதி கையளிக்கப்படும் என்ற தகவலே அவரை திக்குமுக்காட வைத்துவிட்டது.

திடீரென நாடாளுமன்றத்தை கலைத்து, தேர்தலுக்கு செல்லவேண்டிய நிலையை அவருக்கு ஏற்படுத்தியது. ஒகஸ்ட் 21 ஆம் திகதி ஐ.நா. அறிக்கை வெளியாகும்போது, அதனை வெளிவராமல் கட்டுப்படுத்துவது கடினமாகும். ஏற்கனவே அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஐ.நா. வின் சில அறிக்கைகள் முன்கூட்டியே ஊடகங்களில் கசிந்திருந்தன. எனவே, ஒகஸ்ட் 21 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்ற தேர்தல் என்ற கண்டத்தை கடந்துவிடும் முடிவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுக்க நேரிட்டது. அதன் விளைவே இந்த நாடாளுமன்ற தேர்தல். இந்த தேர்தல், எத்தகைய ஆச்சரியமான முடிவுகளை தருகிறதோ, இல்லையோ அதற்கு பின்னர் வெளிவரப்போகும் ஐ.நா. அறிக்கை ஆச்சரியமான அதிர்ச்சிகரமான ஒன்றாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதனை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல ஹுசேன் தான், தெரிவித்திருக்கிறார்.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகாவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் பிரிவில் முறைப்பாடு செய்யப்படும்



## கம்மன்பில எச்சரிக்கை

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

2005 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது இடம்பெற்ற ஒரு பில்லியன் ரூபா மோசடி குறித்து முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற காலத்தில் இந்த மோசடி இடம்பெற்றது.

இந்தப் பாரியளவு நிதி மோசடியினால் பொதுமக்கள் பணம் விரயமாக்கப்பட்டுள்ளது. இந்த மோசடி குறித்த தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. குறித்த தகவல்களின் அடிப்படையில் எதிர்வரும் திங்கட்கிழமை இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவில் சந்திரிகாவிற்கு எதிராக முறைப்பாடு செய்யப்படும் என உதய கம்மன்பில, கொழும்பு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

ஒரு பில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டதாக ஊடகத்திற்கு குறிப்பிட்ட போதிலும் எவ்வாறான மோசடி என்பது குறித்த விரிவான விபரங்களை கம்மன்பில வெளியிடவில்லை என்பது குறிப்பித்தக்கது. (இ-7)

# தேர்தலை நடத்துவதன் மூலம் மகிந்தவின் நிலைமை புரியும்

எதிர்வரும் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிலை என்ன என்பது தெளிவாக புரியும் என அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மகிந்தவுக்கு கிராம மக்கள் ஆதரவளிக்கின்றார்களா? இல்லையா? என்பதனை தேர்தல் நடத்தினால் தெரிந்து கொள்ள முடியும்.

கட்சியை காப்பாற்ற சில வேளைகளில் வேட்பு மனு வழங்கினாலும், மகிந்தவுக்கு வேட்பு மனு வழங்கி, கழுத்தை வெட்டிக் கொள்ள ஜனாதிபதி மைத்திரிபால விரும்பியிருக்கமாட்டார்.

100 நாள் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது, பொருட்கள் சேவைகளுக்கான விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. கள்வர்களை பிடித்து நல்லாட்சியை நாட்டில் நிறுவியுள்ளோம்.

மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி குறித்த கோப் அறிக்கை எங்களுக்கு ஓர் பிரச்சினையில்லை.

ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்ற வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்றே நாம், நாடாளுமன்றைக் கலைக்குமாறு கோரியிருந்தோம் என ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். (இ-7)

# பொதுத்தேர்தலில் தனித்துப்போட்டியிட பொதுபல சேனா அமைப்பு தீர்மானமாம்

## ஞானசார தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எந்தவொரு பிரதான அரசியல் கட்சியுடனும் இணைந்து போட்டியிடாது தனித்து போட்டியிட் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார்.


பொதுபல சேனாவை சில தரப்பினர் சிங்கள பௌத்த பேரினவாத மற்றும் அடிப்படைவாத கட்சியாக அடையாளப்படுத்த முயற்சிக்கின்றனர்.

எனினும், தமிழ் முஸ்லிம் எந்தவொரு தரப்பினருக்கும் எமது கட்சியின் கதவுகள் திறந்துள்ளது.

கட்சிக் கொள்கைகளுக்கு இணங்கினால் தேர்தலில் போட்டியிடவும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

தற்போதைய அரசாங்கம் நாட்டை பாரிய குழியில் தள்ளிக் கொண்டுள்ளது.

வெளிநாட்டு சக்திகளுக்கு தேவையான வகையில் நாடு ஆட்சி



செய்யப்படுகின்றது என ஞானசார தேரர் சிங்கள வார இறுதி பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)

# குடும்ப அரசியலை வளர்க்க மகிந்த முயற்சிக்கின்றாரா?


## ரணில் கேள்வி

(கொழும்பு)

ஊழல் மோசடிகள் மற்றும் குடும்ப அரசியலை மீளவும் வளர்ப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முயற்சிக்கின்றாரா என் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் மகிந்த தனது நிலைப்பாட்டை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென ரணில் விக்கிரமசிங்க தனது முகப் புத்தகத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஓர்



சுவரொட்டியில் "நான் தயார்" என குறிப்பிட்டுள்ளது. எதற்கு தயார் மீண்டும் ஊழல் மோசடிகள் மற்றும் குடும்ப ஆட்சியை நடத்துவதற்கு தயாராகின்றாரா?

குடும்ப ஆட்சிக்கா? ஊழல் மோசடிகளுக்காக நாட்டில் பீதியை மீளவும் ஏற்படுத்தவா தயாராகின்றார் என தெளிவுபடுத்த வேண்டும்.

அவ்வாறு சொன்னால் அதற்கு ஏற்ற வகையில் நாம் செயற்பட முடியும்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியை இல்லாமல் செய்யும் நோக்கிலேயே ஐக்கிய தேசியக் கட்சி பொதுத் தேர்தலில் களமிறங்குகின்றது.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி செய்த புரட்சியை மீள் உறுதி செய்யும் வகையில் இந்த பொதுத் தேர்தல் அமையும் என ரணில் விக்கிரமசிங்க தனது முகப் புத்தகத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## அம்மா பிள்ளைகள்

சில பேர் குழந்தைகளிடம் பேசும் போது குழந்தை மாதிரியே பேசுவார்கள். அதாவது மழலை மொழியிலேயே பேசுவார்கள். அப்படிப் பேசினால்தான் குழந்தைக்கு பிடிக்கும்–புரியும்–என்பது இவர்களின் எண்ணம்.

ஆனால் அப்படிப் பேசுவது தவறு என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

நாம் பேசுவதை பார்த்துத்தானே குழந்தைகள் பேசக் கற்றுக் கொள்ளும். நாமே குழந்தை மாதிரி பேசிக் கொண்டி ருந்தால் அவர்கள் நல்ல விதமாக பேசக் கற்றுக் கொள்வது எப்படி?

இதனால் குழந்தை பேசக் கற்றுக் கொள்ளும் வேகம் தடைப்படும்.

குறித்த 10 குழந்தைகளிடம் உனக்கு அம்மாவைப் பிடிக் குமா? அப்பாவைப் பிடிக்குமா? என்று கேட்டால் அரைவாசிக் குழந்தைகளுக்கு மேல் அம்மாவைப் பிடிக்கும் என்று தான் சொல்லும்.

குழந்தை தாய் வயிற்றில் ஏழு மாதக் குழந்தையாக இருக்கும் போதே அம்மாவின் குரலைக் கேட்குமாம். தாயின் வயிற்றுக்குள் ஒரு சிறிய 'மைக்' வைத்து ஒலிப் பதிவு செய்து பார்த்திருக்கிறார்கள்.

மற்றவர்கள் பேசுவதை விட அம்மா பேசும் குரல் தான் மிகவும் தெளிவாகக் கேட்கிறதாம்.

ஆக ஒரு குழந்தை ஆரம்பத்திலிருந்தே கேட்கும் குரல் அம்மாவின் குரல். அதனால் தான் அம்மா என்றால் ஒரு தனிப்பாசம். தாயின் பேச்சைக் கேட்டுத் தான் வயிற்றில் இருக்கும் குழந்தை பேசக் கற்றுக் கொள்கிறது. பிறக்கும் போதே நமக்கெல்லாம் தாய் மொழிப்பற்று உண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

பிரெஞ்சு மொழி பேசும் ஒரு குடும்பத்தில் ஆராய்ச்சி நடத் தினார்களாம். பிறந்து நான்கு நாட்கள் ஆவதற்குள் குழந்தை ரஷ்ய மொழியை விட பிரெஞ்சு மொழியை விரும்புகிறது என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

எட்டு வயதுக்கு மேல் புதிதாக கற்றுக் கொள்ளும் எந்த மொழியுமே தாய் மொழியை விட கஷ்டமாகத்தான் இருக் குமாம். ஒருகுழந்தை பிறந்து 8 மாதம் ஆனதுமே நாம் பேசும் பேச்சு புரிய ஆரம்பித்து விடும். அதனால் அதன் பின்னரும் சின்னக் குழந்தை மாதிரி உட்கார்ந்து மழலை மொழி பேசிக் கொண்டிருக்காதீர்கள்.

தெளிவாக நல்ல தமிழில் பேசுங்கள். அது புரிந்து கொள்ளும்– கற்றுக் கொள்ளும். அந்த நேரத்திலெல்லாம் நாம் பேசுவதை நாம் பேசுவது மாதிரியே குழந்தை திருப்பிச் சொல்லும். தானே யோசித்துப் பேச 2–3 வருடங்கள் ஆகும்.

ஜான்லாக் என்ற அமெரிக்க விஞ்ஞானி இது பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார். அவர் சொல்கிறார்.

குழந்தை தாயின் வயிற்றில் 7 மாதமாக இருக்கும் பொழுதே பேசக் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கிறது. விரைவாக பேச ஆரம்பிக்கும் குழந்தை புத்திசாலியாக இருக்கும் என்று சிலர் சொல்லுவதுண்டு.

அதுவும் ஒரு பொய்யான நம்பிக்கைதான் என்கிறார் இந்த ஆராய்ச்சியாளர்.

பிறந்த குழந்தைக்கு அப்பாவை விட ஏன் அம்மாவைப் பிடித்திருக்கிறது? என்ற கேள்விக்கு இவருடைய ஆராய்ச்சி விடை சொல்கிறது.

அப்பா குழந்தைகளிடம் கெட்ட பெயர் வாங்குவதற்கு வேறு பல காரணங்களும் உண்டு.

ஒரு அப்பா தன் பிள்ளையைப் பார்த்து "உங்கள் கணக்கு வாத்தியார் 'Home work' கொடுத்திருப்பதாக சொன்னாயே... அதற்கு நான் ஏதாவது உதவி செய்யவா? அந்தக் கணக்கை நான் செய்து காட்டவா?" என்று கேட்டார்.

"வேணாமப்பா! நானே அதை தப்பாக போட்டுக் கொள்கிறேன்" என்றான் பையன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குருப் பெயர்ச்சி பலன்கள்



**இரண்டாம் இடத்தில் குரு பார்வை!**
**திரண்ட செல்வம் இனிச் சேரும்!**
**வெற்றியை குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் விருச்சிக இராசி நேயர்களே!**

விதியை மதியால் வெல்லலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் உங்களுக்கு இதுவரை ஒன்பதாமிடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் இப்பொழுது பத்தாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். தன பாக்யாதிபதியான குரு தொழில் ஸ்தானம் எனப்படும் பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தொழிலில் தனலாப விருத்தி ஏற்படும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

குரு இருக்குமிடத்தைக் காட்டிலும் பார்க்கும் இடத்திற்குத்தான் பலன் அதிகம் உண்டு. பத்தில் குரு வரும் பொழுது திசை மாறிய தென்முகக்கடவுளை வழிபடுவது நல்லது.

**ஆலோசனை சொல்வதில் அசகாய சூரர்கள்!**

நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் சாதனையாக இருக்கும். ஆலோசனைகள் சொல்வதில் அசகாய சூரர்கள் என்றே சொல்லலாம். நீங்கள் சொல்லும் யோசனைகள் வெல்லும் யோசனைகளாக இருக்கும்.

இனிய பேச்சாற்றலால் இதயங்களை கவர்ந்திழுக்கும் உங்களுக்கு இந்த சிம்ம குரு செல்வ நிலையை எந்தெந்த வழிகளில் உயர்த்தப் போகிறார் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**ஜீவன ஸ்தானம் தன்னில்**
**செல்கின்ற குருவினாலே**
**ஆவல்கள் பூர்த்தியாகும்!**

பொருளாதார நிலை போதுமான அளவிற்கு உயரும்.

ஏழரைச் சனியின் ஆதிக்கமும் இருக்கின்றது. எனவே இடையிடையே ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்பட்டாலும் மாற்று மருத்துவத்தால் உடல்நலத்தை சீராக்கிக் கொள்வீர்கள். மனைகட்டிக் குடியேறும் வாய்ப்பு கிட்டும். மக்கள் செல்வங்களுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் பெருகும். சொன்ன சொல்லை நிறைவேற்றும் யோகமும் வந்து சேரும்.

மகம் நட்சத்திரக் காலில் குரு சஞ்சரிக்கப் போவதால் விசாகம் மற்றும் அனுஷம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சிறப்புப் பரிகாரங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். வாரம் தோறும் சனிக்கிழமையன்று சனிபகவான் சன்னிதியில் 'கருநிறக் காகமேறி, காசினி தன்னைக் காக்கும்' என்ற சனி கவசம் பாடலைப் பாடி எள் தீபம் ஏற்றி, சனியை வழிபடுவது நல்லது. வியாழக்கிழமை தோறும் குருபகவான் சன்னிதியில் 'வானவர்க்கு அரசனான வளம் தரும் குருவே' என்ற குரு கவசம் பாடி, நெய் தீபம் ஏற்றிக் குருவை வழிபடுவது நல்லது.

**குரு பார்வை கொடுக்கும் யோகங்கள்!**

இதுவரை உங்கள் ராசிக்கு ஒன்பதாமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது பத்தாமிடத்தில் சஞ்சரித்து அதன் பார்வையை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிவு செய்கிறார். எனவே அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. வாக்கு, தனம், குடும்பம், தாய், சுகம், வாகனம், எதிர்ப்பு, வியாதி, கடன், உத்தியோகம், தொழில் ஆகிய அனைத்து வழிகளிலும் நீங்கள் எதை எல்லாம் எதிர்பார்த்துக் காத்திருந்தீர்களோ அவற்றை எல்லாம் வழங்கி ஆச்சரியப்பட வைக்கப் போகின்றது.

**இரண்டினை குருதான் பார்த்தால்**
**இல்லத்தில் அமைதி கூடும்!**
**நான்கினை குருதான் பார்த்தால்**




வேலை உண்டு என்று வெற்றி நடைபோடுவீர்கள். பிரயாசை எடுத்தும் முடிக்க இயலாத காரி யங்கள் இப்பொழுது வெகு எளிதில் முடிந்து விடும். வீடு வாங்கும் முயற்சி அல்லது கட்டும் முயற்சியில் வெற்றி கிட்டும். சொத்துக்களால் ஆதாயம் உண்டு. கோபத்தைக் குறைத்துக் கொண்டு குடும்ப உறுப்பினர் களை அனுசரித்துச் சென்றால் உங்கள் கோரிக்கைகள் நிறைவேறும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

நான்காமிடத்தைக் குரு பார்ப்பதால் தாயின் உடல்நலம் சீராகும். தக்க விதத்தில் சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும். கல்வி வளர்ச்சி பெருகும். உங்கள் அறிவு திறமைக்கு பாராட்டும், புகழும் கிடைக்கும். கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் முயற்சிக் கும், புதிதாக வீடு கட்டும் முயற்சிக்கும் கைகொடுக்கும் நேரமிது. பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். பட்டப்படிப்பை பாதியில் விட்டவர்கள் மீதியும் தொடர்வர்.

குருவின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால் எதிரிகள் விலகிச் செல்வர். லாப நோக்கத்தோடு பழகியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும். மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும். வெளிநாட்டு யோகம் வெற்றிகரமாக அமையும். கடன் சுமை குறைய புதிய வழிபிறக்கும். அதிகாரிகள் அனுகூலமாக நடந்துகொள்வர். உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் வந்து சேரும்.

**கேது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். அரசியல் பிரமுகர்களால் காரிய வெற்றி உண்டாகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும். பயணங்களால் பலன் உண்டு.

**சுக்ரன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

மக்கள் செல்வாக்கு மேலோங்கும். மகத்தான பொறுப்புகளை ஏற்று மகிழ்வீர்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டும் நேரமிது. தங்கம், வெள்ளி மற்றும் ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. புதிய வாகனங்களை வாங்கி மகிழ்வீர்கள். அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடி அமையும் அற்புதமான நேரமிது.

**சூரிய சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

நிர்வாகத்திறமை பளிச்சிடும். நிகழ் காலத் தேவைகள் பூர்த்தியாகும். தொழில்



களை நம்பி ஒப்படைத்த பொறுப்பு மீண்டும் உங்களிடமே திரும்பி வரலாம். குடும்பச் சுமை கூடும். குடும்பத்தில் அமைதி கிடைக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

பெற்றோரின் பாசம் குறைகிறதே என்று கவலைப்படுவீர்கள். பிள்ளைகளை அதன் போக்கில் விடாமல் உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது பெருமை சேர்க்கும். இதுபோன்ற காலங்களில் பிள்ளையார்பட்டியில் வீற்றிருந்து அருள் வழங்கும் கற்பக விநாயகரை வழிபடுவதோடு முருகப் பெருமானையும் வழிபட்டு வருவது நல்லது.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

செவ்வாய்க்கிழமை தோறும் சிவாலயம் சென்று ஆனைமுகப்பெருமானையும், ஆறுமுகப்பெருமானையும் வழிபாடு செய்யுங்கள்.

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

## இரண்டாமிடத்தில் குரு பார்வை! திரண்ட செல்வம் இனிச் சேரும்!

**ஆன்றோரின் நட்புக் கிட்டும்!**
**தேவைகள் நடப்பதற்கு**
**செல்வங்கள் வந்து சேரும்!**
**நாவினால் சொல்லும் சொற்கள்**
**நடந்திடும் நன்மை வாய்க்கும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, ஜீவன ஸ்தானம் என்று சொல்லப்படுகின்ற பத்தாமிடத்திற்கு செல்கின்ற பொழுது உங்களுடைய ஆவல்கள் அனைத்தும் பூர்த்தியாகும். ஆன்றோர்களின் நட்பு கிட்டும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும்.

**நல்லதோர் சுகங்கள் வாய்க்கும்!**
**ஆறினை குருதான் பார்த்தால்**
**அகிலத்தில் தொழில்கள் சேரும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் 2 ஆம் இடத்தைப் பார்க்கும் குருவால் இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள போதுமான பொருளாதாரம் வந்து சேரும். எனவே எதற்கும் அலட்டிக் கொள்ள மாட்டீர்கள். தான் உண்டு, தன்

சார்ந்த பயணங்கள் அதிகரிக்கும். அசையாச் சொத்துக்களை வாங்கிச் சேர்க்க முன்வருவீர்கள். அரசியல்வாதிகளால் ஆதாயம் கிடைக்கும். தீட்டிய திட்டங்கள் அனைத்தும் வெற்றி பெறும் நேரமிது.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

குருவின் வக்ர காலத்தில் கொஞ்சம் கொள்கைப் பிடிப்பைத் தளர்த்திக் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும். தொழிலில் கூடுதல் கவனம் செலுத்தினால்தான் ஆதாயம் கைக்கு வந்து சேரும். நண்பர்

**விருச்சிக ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்த குருப்பெயர்ச்சி உங்களுக்கு எல்லா வகைகளிலும் நன்மைகளைத்தான் வழங்கப் போகின்றது. இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறும் வாய்ப்பு கிட்டும். ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உற்சாகத்தோடு பணிபுரிய உடல்நலம் இடம் கொடுக்கும். அக்கறை காட்டாத செயலில் கூட ஆதாயம் கிடைக்கும். கணவன்- மனைவி உறவில் அன்யோன்யம் அதிகரிக்கும். புத்திரப்பேறுக்காக காத்திருப்பவர்களுக்கு நல்ல மக்கள் செல்வங்கள் வாய்க்கும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் மற்றும் வீடுகள் வாங்கும் யோகம் உருவாகும். சேமிப்பு அதிகரிக்கும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்பதவியும், ஊர் மாற்றங்களும் வந்து சேரலாம். தாராளமாக தங்க நகைகளும், வெள்ளிச் சாமான்களும் வாங்கும் வாய்ப்பு கிட்டும். தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினரின் ஒத்துழைப்பு எதிர்பார்த்தபடியே கிடைக்கும். திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபட்டு வருவதோடு பவுர்ணமி தோறும் கிரிவலம் வருவதன் மூலம் நற்பலன்களை பெறலாம்.

(நாளை தனுசு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிரியாவில் பொதுமக்கள் முன்னிலையில் 25 இராணுவத்தினர் சுட்டுப் படுகொலை!

## ஐ.எஸ்.ஐ.எஸ் தொடர்ந்து அச்சுறுத்தல்

(பெய்ரூட்)

**சிரியாவில் பொதுமக்கள் முன்னிலையில் 25 இராணுவத்தினரை ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் சுட்டுப் படுகொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**





இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

சிரியா மற்றும் ஈராக் நாடுகளில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனா். அங்கு தனிநாடு அமைத்துள்ள அவர்கள் தங்கள் பிடியில் இருக்கும் பிணைக் கைதிகளை கொடூரமாக கொலை செய்து வீடியோவாக வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் மீண்டும் கொடூர கொலை வீடியோவை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

சிரியாவில் பாரம்பரிய நகரமான பல்மைராவில் தங்களை எதிர்த்து போரிட்ட இராணுவ வீரர்களை தீவிரவாதிகள் பிணைக் கைதிகளாக பிடித்தனர்.

அவர்களில் 25 பேரை ஒரே நேரத்தில் சுட்டுப் படுகொலை செய்தனர். இராணுவ வீரர்களை குழந்தைகளும், சிறுவர்களும் துப்பாக்கியால் சுட்டனர்.

இச்சம்பவம் போட்டி நடைபெறும் திறந்த வெளி அரங்கில் நடந்தது. அதை ஏராளமான பொது மக்கள் அமர்ந்து நேரில் பார்த்தனர்.

முன்னதாக 25 இராணுவ வீரரகளும் திறந்த வெளி அரங்க மேடையில் முழங்காலிட்டு நிற்க வைக்கப்பட்டனர். அவர்கள் சிரிய இராணுவ உடையில் இருந்தனர்.

அவர்களின் முன்பு ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்க உடை அணிந்த குழந்தைகளும், சிறுவர்களும் அணிவகுத்து வந்து பின்னால் நின்று சுட்டுக் கொன்றனர்.

இந்த வீடியோ இணைய தளங்களில் வெளியிடப்பட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை இவ்வாறான 200 இற்கும் மேற்பட்ட கொலைகளை தீவிரவாதிகள் அரங்கேற்றியுள்ளனர். (இ-7)

# இஸ்ரேல் மீது ரொக்கெட் வீச்சு



எகிப்து நாட்டில் சினாய் தீபகற்ப பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதரவு பெற்ற **சினாய் பிராவின்ஸ்** என்ற தீவிரவாத அமைப்பு இயங்கி வருகிறது.

இந்த அமைப்பினர், இஸ்ரேல் மீது 3 ரொக்கெட்டுகளை வீசியதாக தெரிவித்துள்ளனர். எகிப்து இராணுவத்துக்கு இஸ்ரேல் ஆதரவு அளித்து வருவதற்கு பழிவாங்கும் விதமாகவே இந்த ரொக்கெட் தாக்குதலை நடத்தியதாக அந்த அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த அமைப்பினர் சமூக வலைத்தளம் ஒன்றில் வெளியிட்ட செய்தியில், 'ஆக்கிரமிப்பு பாலஸ்தீனம் மீது கிராடு ரொக்கெட்டுகள் வீசப்பட்டன என கூறப்பட்டுள்ளது.

இஸ்ரேல் இதுபற்றி குறிப்பிடுகையில்,

நாட்டின் தெற்கு பகுதியில் 2 ரொக்கெட்டுகள் வந்து விழுந்தன. இதில் உயிருக்கோ, உடைமைகளு க்கோ எந்த பாதிப்பும் நேரவில்லை என கூறியது.

சினாய் தீபகற்ப பகுதியில் கடந்த புதன்கிழமை முதல் நடந்து வந்த சண்டையில் 17 எகிப்து வீரர்களும், 100 ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளும் பலியாகி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)




# பாகிஸ்தானில் மதகுருமாருக்கு 10ஆண்டுகள் சிறைத்தண்டனை

பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணம், காயிம்பூரில் உள்ள மசூதியில் மத குருவாக இருந்தவர் மவுலானா அப்துல் கனி.

இவர் 2 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் மசூதியில் பேசியபோது ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மீது வெறுப்புணர்வை தூண்டும் வகையில் பேசியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

அவர் மீது வெறுப்புணர்வை தூண்டியதாக தீவிரவாத தடுப்பு நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டது. விசாரணையில் அவர் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக கருதிய நீதிபதி காலித் அர்ஷத், அவருக்கு 10 ஆண்டு சிறைத்தண்டனையும். 7 இலட்சம் ரூபா அபராதம் விதித்தும் நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கினார்.

இதேபோன்று அங்கு வெறுப்புணர்வை விதைக்கும் இலக்கியங்களை விநியோகம் செய்ததாக தொடரப்பட்ட வழக்கில் 4 பேருக்கு பல்வேறு கால அளவிலான சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.(இ-7)

# சீனாவில் ஷூ தொழிற்சாலையில் கட்டடம் இடிந்து 9பேர் உயிரிழப்பு



சீனாவில் ஷூ தொழிற்சாலையில் நேற்று முன்தினம் மதியம் கட்டடம் இடிந்து விழுந்ததில் 9 பேர் பலியாகி உள்ளனர். 40 இற்கும் மேற்பட்டவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவில் உள்ள செஜ்ஜியாங் பகுதியில் உள்ள வென்லிங் என்ற இடத்தில் ஷூ தொழிற்சாலை உள்ளது. இதில் ஷூ தயாரிப்பில் 51 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக கட்டடம் சரமாரியாக திபு திபுவென சரிந்து விழுந்தது. இதில் 51 ஊழியர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டனர். இது குறித்து தகவல் அறிந்து வந்த தீயணைப்பு படையினர் மற்றும் மீட்பு படையினர் கட்டட இடிபாடுகளில் சிக்கி தவித்த 42 பேரை பத்திரமாக மீட்டனர். மேலும் 9 பேரை சடலமாக மீட்டெடுத்தனர்.

படுகாயம் அடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களின் நிலைமை குறித்த தகவலை டாக்டர்கள் வெளியிட மறுத்துவிட்டனர். சீனாவில் உள்ள இரசாயன தொழிற சாலையில் தீ விபத்து நடந்து 30 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டிருந்தது நினைவுகூரத்தக்கது. மேலும் கடந்த மே மாதத்தில் அங்கு நேர்சிங் ஹோம ஒன்றில் நடந்த தீ விபத்தில் 38 பேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

சீனாநாட்டில் கட்டடம் இடிந்து விழுவதும், தொழிற்சாலையில் விபத்து ஏற்படுவதும் தொடர் கதையாகி வருகின்றது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டணி குறித்துப் பேசுவதற்கு சந்திரிகாவுக்கு அதிகாரமில்லை

## சுசில் தெரிவிப்பு


ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி குறித்து எந்த வகையிலும் பேசுவதற்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அதிகாரம் கிடையாதென கூட்டணியின் பொது செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பு மனு வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளது குறித்து தனக்கு அறிவிக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் சுசில் பிரேம ஜயந்தவிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதற்கு பதிலளிக்கும் வகையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியுடன் எவ்வித சம்பந்தமும் கிடையாதென அவர் கூறியுள்ளார்.

எனவே அவருக்கு கூட்டணியை குறித்து பேசுவதற்கும் எவ்வித அதிகாரமும் கிடையாதென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# உலகில் நம்மை அடையாளப்படுத்துவதற்கு வெற்றியின் மீதான நம்பிக்கை அவசியமே








(யாழ்ப்பாணம்)

**பிரபாகரன் தமிழர்களை, நமது மண்ணை தன் வீரத்தால் அடையாளப்படுத்தினார் எனவும் உலகில் நம்மை அடையாளப்படுத்த வெற்றியின் மீதான நம்பிக்கை அவசியம் எனவும் முன்னாள் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் வரணி மத்திய கல்லூரியின் தொழில்நுட்ப ஆய்வு கூடத் திறப்புவிழா கடந்த 3 ஆம் திகதி நடைபெற்றது. பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சி.சிறீதரன் கலந்து கொண்டார். தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை திறந்துவைத்து உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது,

இந்தப்பாடசாலையின் வரலாற்றில் இந்த தொழில்நுட்ப ஆய்வு கூடத்தின் வரவு ஒரு அத்தியாயமாக, வரப்பிரசாதமாக அமைகின்றது. இப்படியான நவீன வளங்கள் கிடைக்கின்றபோது மாணவர்களின் சிந்தனை திறனும் தேடலும் மாற்றத்திற்கு உள்ளாகின்றது. அதன் மூலம் சாதனைகள் படைக்கப்படுகின்றது. புதிய சிந்தனைகள் படைப்புக்கள் பிறக்கின்றன. இந்த மண்ணிலே எமது தொழில்நுட்ப அறிவை நவீன சிந்தனையை வெளிப்படுத்தக்கூடிய மனிதர்கள் வாழ்ந்து போயிருக்கின்றார்கள். பேராசிரியர் துரைராஜா சிவத்தம்பி போன்ற துறைசார் விற்பன்னர்கள் உலகம் வியக்கும் வண்ணம் வாழ்ந்து வரலாறு ஆகியிருக்கின்றார்கள். இந்த உலகத்தின் வளர்ச்சியுற்ற நாடுகளில்தமிழ்மாணவர்கள்சாதனை படைக்கின்றவர்களாக, கண்டுபிடிப்புக்கள் செய்கின்றவர்களாக இருக்கின்றார்கள். இது தமிழர்களின் மரபில் ஊறியுள்ள விடயம். அதனால் அந்த ஆற்றல் இந்த சந்ததியிடமும் இருக்கும். அவை வெளிக்கொண்டு வரப்பட வேண்டும். அதற்கு மாணவர்கள் முன்வர வேண்டும். உலகத்தை நாம் வெல்கின்றவர்களாக மாறவேண்டும். அதறகு உதைப்பு வேண்டும். கோழிக்குஞ்சு முட்டையை கொத்தி அதை உடைத்துத்தான் இந்த உலகத்தை பார்க்கின்றது. எல்லோரும் யாருக்கும் முழுமையாக தந்துவிடமாட்டார்கள். அதில் முயற்சியும் பங்கும் சிந்தனையும் இருக்க வேண்டும். முதலையும் உதைத்து உடைத்தே வெளிவருகின்றது. அதன் வல்லமையை உணர்கின்றது. வாழ்கின்றது. வாழ்க்கை இப்படித்தான். வாழ்க்கையில் நாம் எம்மை இந்த உலகத்தில் அடையாளப்படுத்த வேண்டும். விவேகானந்தர் இளைஞர்களை நோக்கிய தன் சிந்தனையால் அடையாளமானார். அன்னை தெரேசா அன்பால், அரவணைப்பால் அடையாளமானார். நெல்சன் மண்டேலா விடுதலைப்போராட்டத்தால் தன்னை அடையாளப்படுத்தினார். பிரபாகரன் தமிழர்களை நமது மண்ணை தன் வீரத்தால் அடையாளப்படுத்தினார். எனவே மாணவர்களே! நாமும் இந்த உலகத்தில் சாதனையாளர்களாக மாற வேண்டும். அதற்கு போராடித்தான் ஆகவேண்டும். அதற்கு வெற்றியின் மீதான நம்பிக்கை வேண்டும்.

நம்பிக்கை உள்ளவர்கள் வெற்றி பெறுகின்றார்கள். எல்லா ஜீவராசிகளும் போராடித்தான் தினமும் வாழ்கின்றன. எனவே வாழ்க்கையில் எல்லா துறைகளிலும் நாம் வெற்றி பெற அறிவையும் ஆற்றலையும் வளர்த்து இந்த உலகத்தை நாம் வெல்ல வேண்டும். அதற்கு இந்த தொழில்நுட்ப ஆய்வுகூடமும் ஒரு வாய்ப்பு என மேலும் தெரிவித்தார். இந்த நிகழ்வில் கல்வி உயர் அதிகாரிகள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே. சயந்தன், சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் துரைராசா உட்பட கல்விச் சமுகத்தினர் கலந்துகொண்டனர். (இ-7)

# இருவேறு விபத்தில் ஒருவர் மரணம் இருவர் வைத்தியசாலையில் அனுமதி

அம்பாறை, சுதுவெல்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினமிரவு 11.30 அளவில் குறித்த இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் பேருந்து ஒன்றுடன் நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த இளைஞன் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் அம்பாறை பரகாகெல பிரதேசத்தை சேர்ந்த 17 வயதுடைய இளைஞன் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குறித்த மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றும் ஒருவர் காயமடைந்து அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அம்பாறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பொகவந்தலாவையிலிருந்து ஹற்றன் நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் பொகவந்தலாவையிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் இருவர் படுகாயமடைந்து டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவை ஹற்றன் பிரதான வீதியில் நோர்வூட் தியசிரிகம பகுதியில் இவ்விபத்து நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர்.

பொகவந்தலாவையிலிருந்து ஹற்றன் நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குறித்த பேருந்தின் பின் பகுதியில் மோதி விபத்துக்குள்ளாகியிருப்பதாகவும், மோட்டார் சைக்கிள் சாரதியின் கவனயீனம் காரணமாக இவ்விபத்து நேர்ந்திருக்கலாம் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

# போதையில் சாரதி; 5 பேர் படுகாயம்

மதுபோதையில் பேருந்தை செலுத்தி தொடர்ச்சியாக 4 விபத்துக்களை ஏற்படுத்தி 5 பேரை படுகாயங்களுக்கு உள்ளாக்கிய தனியார் பேருந்து சாரதியை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து தம்மிடம் ஒப்படைத்ததாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்தவர்களில் ஒருவர் தீவிர சிகிச்சை பிரிவிலும் ஏனைய நால்வரும் விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

கொக்கட்டிச்சோலை- கொழும்பு வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்தை மதுபோதையிலிருந்த சாரதி கராஜ்ஜுக்கு பேருந்தை கொண்டு சென்றுள்ளார்.

இதன்போது, மட்டக்களப்பு லேக் வீதியால் துவிச்சக்கரவண்டியில் சென்ற ஒருவரை மோதிவிட்டு தப்பிச் சென்ற இவர், மட்டக்களப்பு நகர் மற்றும் புறநகர் பகுதியில் மேலும் நான்கு வீதி விபத்துக்களை ஏற்படுத்தி 5 பேரை படுகாயங்களுக்கு உள்ளாக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப்புலிகள்மீது குறைகூறுவது வம்பை விலைக்கு வாங்கும் செயல்

## கருணாநிதி கண்டனம்



(சென்னை)

**விடுதலைப் புலிகளால் முல்லைப்பெரியாறு அணைக்கு ஆபத்து என்று உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு கூறியிருப்பது வம்பை விலைக்கு வாங்கும் செயல் என தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாடு - கேரளா எல்லையில் அமைந்திருக்கும் முல்லைப் பெரியாறு அணையின் பராமரிப்புப் பொறுப்பு, தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. அணையின் பாதுகாப்பு கேரளா வசம் இருக்கிறது.

இந்த நிலையில், முல்லைப் பெரியாறு அணைக்கு மத்திய தொழில் பாதுகாப்புப் படையின் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தது.


இது தொடர்பாக, தமிழக அரசு தாக்கல் செய்திருந்த துணை மனுவில், அணையைத் தகர்க்கத் தீவிரவாதக் குழுக்கள் முயற்சிப்பதாக மத்திய உளவுத் துறை தகவல் அளித்திருப்பதாக தமிழக அரசு கூறியிருந்தது.

இந்த மனுவுக்கு தமிழக அரசியல் கட்சிகள் தொடர்ந்து கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றன. ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இது தொடர்பாக போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்புக்கு மத்திய தொழிற் பாதுகாப்புப் படையின் பாதுகாப்பு அவசியம் என்றாலும், விடுதலைப்புலிகள் மீது குறை கூறி, அவர்களால் முல்லைப் பெரியாறு அணைக்கு ஆபத்து என்று உச்ச நீதிமன்றத்தில் கூறியிருப்பது வம்பை விலைக்கு வாங்கும் செயல் என கூறியுள்ளார்.

மேலும் புலிகள் மீது மாசு கற்பிப்பதைப் போலவும் அவர்களின் முதுகிலே குத்தி அவமானப்படுத்துவதைப் போலவும் தமிழக அரசு மனுத்தாக்கல் செய்திருப்பதைக் கண்டிப்பதாக கருணாநிதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அமெரிக்க மக்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்து



அமெரிக்காவின் சுதந்திர தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டி அமெரிக்க மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனது 'டுவிட்டர்' இணையத்தளம் மூலம் அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், 'அமெரிக்க மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்' என்று கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், 'இந்தியாவும், அமெரிக்காவும் துடிப்பான ஜனநாயகத்தை கொண்டுள்ளன. இந்த ஜனநாயக கட்டமைப்புக்காக நாம் பெருமையடைகிறோம். இரு நாடுகளுக்கு இடையேயான பொருளாதார உறவுகள் மிகவும் வலுவானவை. நமது கலாசார உறவுகளோ மிகவும் துடிப்பானவை' என்று தெரிவித்துள்ளார்.

இந்த வாழ்த்து செய்தியில் தனது அமெரிக்க பயணம் மற்றும் ஒபாமாவின் இந்திய பயணத்தை குறித்து எழுதியிருந்த பிரதமர் மோடி, இந்தியா - அமெரிக்கா இடையேயான புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஒப்பந்தம் தொடர்பாக மிகுந்த உற்சாகத்துடனும், நம்பிக்கையுடனும் இருப்பதாக தெரிவித்தார். (இ-7)

# பலியான குழந்தையின் குடும்பத்திற்கும் நிதியுதவி



ராஜஸ்தானில் தனது கார் மோதி பலியான குழந்தையின் குடும்பத்திற்கும், காயமடைந்தவர்களின் குடும்பத்திற்கும் நிதியுதவி அளிக்க பா.ஜ., எம்.பி., ஹேமமாலினி முடிவு செய்துள்ளதாக அவரது மகள் இஷா தியோல் தெரிவித்துள்ளார்.

பிரபல இந்தி நடிகையும், பா.ஜனதா எம்.பி.யுமான ஹேமமாலினி அண்மையில் உத்தர பிரதேச மாநிலம் மதுராவில் இருந்து ஜெய்ப்பூருக்கு தனது காரில் உதவியாளருடன் திரும்பிக் கொண்டிருந்தார்.

அப்போது ராஜஸ்தான் மாநிலம் தவுசா நகர் அருகே அவரது கார் எதிரே வந்த மற்றொரு காருடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் சோனம் என்ற 4 வயது சிறுமி பலியானாள். ஹேமமாலினி உட்பட 5 பேர் படுகாயம் அடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இந்து இயக்கங்களால் பிரதமருக்கு ஆபத்தா?

## உள்துறை அமைச்சகம் விளக்கம்

இந்து இயக்கங்களால் பிரதமர் மோடியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு இருப்பதாக வெளியான தகவல் பற்றி மத்திய உள்துறை அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.

**உயிருக்கு ஆபத்தா?**

சர்வதேச யோகாதினத்தை முன்னிட்டு டில்லியில் உள்ள ராஜபாதையில் கடந்த மாதம் 21ஆம் திகதி பிரமாண்ட மான யோகா நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பொதுமக்களுடன் சேர்ந்து பிரதமர் மோடியும் யோகா செய்தார்.

இந்த நிகழ்ச்சியின் போது பிரதமர் மோடிக்கு டில்லி பொலிஸார் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

முஸ்லிம்களின் ஆதரவை பெறும் முயற்சியில் பிரதமர் மோடி ஈடுபடுவதால், அவரது உயிருக்கு இந்து இயக்கங்களால் அச்சுறுத்தல் ஏற்பட்டு இருப்பதாகவும், இதனால் தான் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதாகவும் சில ஊடகங்களில் செய்தி வெளியாகி இருந்தது.

**உள்துறை அமைச்சகம் மறுப்பு**

ஆனால் இந்த தகவலை மத்திய உள்துறை அமைச்சக வட்டாரங்கள் மறுத்து உள்ளன.

இந்து இயக்கங்களால் பிரதமரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு இருப்பதாக வெளியான செய்தி அடிப்படை இல்லாதது மட்டுமன்றி, உண்மைக்கு புறம்பானதும் ஆகும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்து இயக்கங்களால் பிரதமரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு இருப்பதாக எந்தகவலும் இல்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

## பாரதச் செய்தி

# சரிவை நோக்கிச் செல்லும் சரக்கு ரயில் போக்குவரத்து

அண்மைக்காலமாக இந்தியாவின சரக்கு ரயில் போக்குவரத்து சரிவு பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. நடப்பாண்டில் இந்தியாவில் ரயல்கள் மூலம் கையாளப்படும் சரக்குகளின் அளவு 1101 மில்லியன் தொன்களிலிருந்து 1186 தொன்களாக அதிகரிக்கும் என மத்திய ரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபு ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு ரயில்களில் கையாளப்படும் சரக்குகளின் அளவு கணிசமாக குறைந்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உத்தர பிரதேசம், பீகார், மேற்கு வங்கா எம் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து சீமெந்து, இரும்புத்தாது போன்ற பொருட்களை வழக்கம்போல் அதிகளவில் ரயில்களில் கொண்டு செல்லப்படாததால் சரக்கு ரயில் போக்குவரத்தில் தொய்வு ஏற்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் அதிருப்தியில் அர்ஜுன

# ஐ.தே.கவில் இணையத் தயார்



(கொழும்பு)

**துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க ஐக்கிய தேசியக் கட்சியில் இணையத் தயாராகி வருவதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவது குறித்து ரணதுங்க அந்த கட்சியின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பொதுத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ள ால், அர்ஜுன ரணதுங்க அதிருப்தியடைந்துள்ளார்.

மகிந்தவுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கினால், தான் அரசியல் தீர்மானம் ஒன்றை எடுக்க நேரிடும் என அவர் ஏற்கனவே கூறியிருந்தார்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய அந்த கட்சியுடன் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளதாக ஹெல உறுமயவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜாதிக ஹெல உறுமயவை இணைத்து கொள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு அமைப்பாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தமையே இதற்கு காரணம் என கூறப்படுகிறது. (இ-7)

# இ.போ.ச. வடபிராந்திய மேற்பார்வை அதிகாரி நியமனம்

(யாழ்ப்பாணம்)


இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்தியத்திற்கு மேற்பார்வை அதிகாரியாக உபாலி கிரிபத்துடுவ நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் பிரதான செயலாற்றல் அத்தியட்சகராக பணியாற்றி வரும் இவர் தற்போது வட பிராந்திய மேற்பார்வை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்தியத்தை இரண்டாக பிரித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அண்மையில் இ.போ.ச. ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன் வடபிராந்திய முகாமையாளர் பதவிக்கு இதுவரை எவரும் நியமிக்கப்படாத நிலையில் இவர் மேற்பார்வை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். (இ-9)

# மகிந்தவின் பிரசாரக்குழு பல மில். ரூபாய்களை இன்னும் செலுத்தவில்லை



(கொழும்பு)

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்களுக்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரசாரக் குழு, பல மில்லியன் ரூபாய்கள் அரச நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய பணத் தொகை இன்னும் செலுத்தப்படவில்லை.

இதன்படி பிரசாரங்களுக்காக பயன்படுத்திய பேருந்துகளுக்காக இலங்கை போக்குவரத்து சபைக்கு 140 மில்லியன் ரூபாய்கள செலுத்தப்பட வேண்டியுள்ளன.

இது தொடர்பில் லஞ்ச ஊழல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு பிரசாரங்களுக்காக 8 மில்லியன் ரூபாய்களை மகிந்த ராஜபக்ஷவின் குழு செலுத்த வேண்டியுள்ளது.

இந்தநிலையில் மறைமுகமான விளம்பரங்களாக அம்பரந்தோட்டை துறைமுகம், மத்தளை விமான நிலையம் போன்றவற்றின் விளம்பரங்களும் ஒளிபரப்பட்டன.

இவையாவற்றையும் சேர்த்து மகிந்த ராஜபக்ஷவின் குழு 30 மில்லியன் ரூபாய்களை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு செலுத்த வேண்டியுள்ளது.

எனினும் 4 மில்லியன் ரூபாய்கள் மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளன. (இ-7)

# செல்ஃபி



சாயிநாத்சாய் கோப்பாய் தெற்கு



அனோஜன் - வவுனியா




ரீகன்



லக்கி - சுழிபுரம்



எஸ். சதீஸ்



நிரோஜன் - கிளிநொச்சி

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாகவோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர்,
முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிய குணங்களைக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்தவும் தெரியவேண்டும். -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனாதிபதி மைத்திரியை ஏமாற்ற பிரயத்தனம் செய்யும் மகிந்த

பேரறிஞர் அண்ணாதுரையின் திராவிட முன்னேற்றக்கழகமும் காமராஜரின் காங்கிரஸ் கட்சியும் தமிழக சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுகின்றன.

கடும் போட்டி காமராஜரின் வெற்றிக்காக பகுத்தறிவின் தந்தை ஈ.வே.ரா.பெரியார் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு வழங்குகிறார். பெரியாரின் ஆதரவால் திராவிட முன்னேற்றக் கழகம் கதிகலங்கி நிற்கிறது.

பிரசாரங்கள் சூடு பிடிக்கின்றன. காமராஜர் ஒரு நல்ல மனிதர். கர்மவீரர் என்று மக்களால் புகழ்ந்து போற்றப்பட்டவர். எந்தச் சூதுவாதும் இல்லாமல் தேர்தல் களத்தில் நிற்கின்றார். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தேர்தலில் தோல்வி நிச்சயம் என்றாயிற்று.

தேர்தலுக்கு முதல்நாள் அறிஞர் அண்ணாதுரை ஒரு நரித் திட்டம் தீட்டினார். திராவிட முன்னேற்றக் கழகம் சார்ந்த தலைவர்களை ஒன்று சேர்த்தார்.

ஈ.வே.ரா.பெரியாரிடம் செல்வதென முடிவெடுத்தார். பெரியாருடனான தங்கள் சந்திப்புப் பற்றி ஊடகங்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது.

பெரியாரின் வீட்டுக்கு கட்சித் தோழர்களுடன் சென்ற அறிஞர் அண்ணாதுரை பெரியாரின் காலில் விழுந்து "நாளை தேர்தல் நாங்கள் வெற்றி பெற எங்களை ஆசீர்வதியுங்கள்" என்றார்.

பெரியாரும் நீங்கள் வெற்றி பெற ஆசீர்வதிக்கிறேன் என்ற பொருள்பட வாழ்த்தினார். காலில் விழுந்து எங்களை ஆசீர்வதியுங்கள் என்று கேட்பவர்களை வாழ்த்துவது பெரியவர்களின் கடமையல்லவா? அதைத்தான் ஈ.வே.ரா.பெரியாரும் செய்தார்.

மறுநாள் தேர்தல்; தமிழகத்தில் வெளிவரும் அத்தனை நாளிதழ்களிலும் திராவிட முன்னேற்றக்கழகம் வெற்றி பெறுவதற்கு ஈ.வே.ரா.பெரியார் வாழ்த்து என்ற செய்தியோடு பெரியாரும் அண்ணாதுரையும் ஆரத்தழுவி நிற்கின்ற புகைப்படங்களும் வெளிவந்தன.

விடிகாலைப் பொழுதில் தமிழகத்தில் பெருமாற்றம். காமராஜரின் கட்சிக்கு ஆதரவளிக்க இருந்தவர்கள் திசைமாறி அண்ணாதுரையின் திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு வாக்களித்தனர். தேர்தல் முடிவு தி.மு.க வெற்றி என்றாயிற்று.

பகுத்தறிவின் தந்தை பெரியார் தோற்றுப் போன இடம் இது. என்ன செய்வது காலில் விழுந்து வணாங்கும் போது, அவர்களை ஆசீர்வதிக்காமல் எங்ஙனம் விடமுடியும். உயர் பண்புடைய மனிதர்கள் நிச்சயம் ஆசீர்வதிக்கவே செய்வர்.

இந்த இடங்களில் நரித் தந்திரம் செய்வோர் மிகப்பெரும் மோசமானவர்கள் என்பது உணரப்பட வேண்டும்.

இலங்கையிலும் நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் நரித் தந்திரங்கள் தீட்டப்படுகின்றன. மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து போட்டியிடுவதாக அறிவிப்புக்கள் வெளிவருகின்றன. ஜனாதிபதி மைத்திரி இதற்கு ஆதரவு வழங்கியுள்ளார் என்ற கதை கட்டல்களும் சோடிக்கப்படுகின்றன.

மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுவதற்கு ஜனாதிபதி மைத்திரி ஆதரவு என்ற செய்திகளை பரப்புவதன் மூலம் மிகப்பெரியதொரு நரித்திட்டம் தீட்டப்படுகிறது.

ஆம்! அண்ணாதுரை, ஈ.வே.ராவை ஏமாற்றியது போல நல்ல மனிதராகிய ஜனாதிபதி மைத்திரியை ஏமாற்றி தேர்தலில் போட்டியிடுவதற்கு மகிந்த கடும் பிரயத்தனம் செய்கிறார்.

ஜனாதிபதி மைத்திரி நிதானம் தவறாத தலைவர் என்பது தமிழ் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

## மகிந்தவுக்கு வழங்கப்பட்ட வாய்ப்பால் ஐக்கிய தேசிய கட்சிக்கு மகிழ்ச்சி

### சமூக சேவைகள் அமைச்சர் தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட மகிந்த ராஜபக்ஷவுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சி சந்தோசமடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரங்களின் போது எதிரான பிரசாரங்களை மேற்கொள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு காரணங்கள் இருக்கவில்லை.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்க இயலாத நிலையும் இருந்தது.

எனினும் தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் மகிந்தவுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டமை காரணமாக அந்தக் கூட்டமைப்பில் உள்ள ஊழல்காரர்களை குறிவைத்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வாய்ப்பு கிடைத்துள்ளது என்று ரஞ்சன் ராமநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதன் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சி முழு நம்பிக்கையுடன் பிரசாரங்களை மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (செ)

## ஆசன ஒதுக்கீடு குறித்த கூட்டமைப்பின் முடிவு இன்று

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் தொடர்பில் இன்று இறுதி முடிவு எடுக்கப் படவுள்ளது.

இத்தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இடையிலான ஆசன ஒதுக்கீடு தொடர்பில் இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணம். அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கான ஆசன ஒதுக்கீடு தொடர்பில் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுள்ள போதிலும். வன்னி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான ஆசன ஒதுக்கீடு தொடர்பில் இன்னமும் இணக்கப்பாடு ஏற்படவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் பெயர் பட்டியல் ஒன்று ஏற்கெனவே வெளியாகியுள்ள போதிலும். அதனை கூட்டமைப்பின் தலைமைப்பீடம் இதுவரை உறுதிசெய்யவில்லை.

இது தொடர்பில் இறுதி முடிவு எடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் இடம்பெறவிருந்த போதிலும் அது இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில். இந்தக் கூட்டம் இன்று நடைபெறும் என்றும். இதன்போது கட்சிகளுக்கு இடையிலான ஆசன ஒதுக்கீடு தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். (செ)

### ரவிராஜ் படுகொலை

## சந்தேக நபருக்கு எதிராக சிவப்பறிக்கை

(கொழும்பு)

ரவிராஜ் படுகொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் தேடப்பட்டுவரும் நபருக்கு எதிராக சிவப்பறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் வெளிநாடொன்றுக்கு தப்பிச் சென்றுள்ள காரணத்தினால் அவரைக் கைது செய்வதற்கு கொழும்பு மேலதிக நீதவான் நிரோஷா பெர்னாண்டோ. சிவப்பு அறிக்கையொன்றை விடுத்துள்ளார.

2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சுட்டுக்கொல்லப்பட்ட அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் கொலை தொடர்பிலேயே சரண் என்றழைக்கப்படும் விவேகானந்தன் ஸ்ரீகாந்தன் என்பவரைக் கைது செய்வதற்காக இவ்வாறு சிவப்பு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (செ)

## புனர்வாழ்வு ஆணையாளர் ஜெகத் விஜேதிலக மரணம்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் மூத்த அதிகாரிகளில் ஒருவரும், புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமுமான மேஜர் ஜெனரல் ஜெகத் விஜேதிலக நேற்று முன்தினம் திடீரென மரணமானார்.

நேற்று முன்தினம் மாலை திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாகவே. மேஜர் ஜெனரல் ஜெகத் விஜேதிலக மரணமானதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இவர் இலங்கை இராணுவத்தில் முக்கியமான பல பதவிகளை வகித்திருந்தவர் என்பதுடன், 2013ம் ஆண்டு தொடக்கம் இராணுவத்தின் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமாக பணியாற்றி வந்தார்.

இவரது பொறுப்பின் கீழேயே முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

## அசாத் சாலி கண்டியில் களமிறங்கவுள்ளார்

(கொழும்பு)

முஸ்லிம் தமிழ் தேசிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி எதிர்வரும் பொதுத்தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார்.

இதனை அவர் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து அல்லது தனித்து தாம் போட்டியிடவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி மாவட்ட மக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே தாம போட்டியிடுவதாக அசாத் சாலி தெரிவித துள்ளார்.

தாம். ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன பேசியதாகவும் ஏற்கெனவே கண்டி மாவட்டத்தில் போட்டியிட இரண்டு முஸ்லிம்களை பரிந்துரைத்துள்ளதாக ரணில் குறிப்பிட்டதாகவும் அசாத் சாலி தெரிவித்தார்.

மேலும் கடந்த காலங்களில் பல முஸ்லிம்கள் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டமையை சுட்டிக்காட்டிய அவர்.

இனவாத அடிப்படையில் ஐக்கிய தேசியக்கட்சி முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை குறைத்துள்ளதாக அசாத்சாலி குற்றம்சுமத்தியுள்ளார். (செ)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## இறைவனின் நிழல்



மனத்தின் இயக்க நிலைகளை இப்போது ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வோம். ஜீவகாந்தமானது உடலில் உள்ள உயிர்ச்சக்தித் துகள்களின் விரைவான சுழற்சியினால் எழும் அலைகளே. ஒரு உடலில் உள்ள உயிர்ச்சக்தித் துகள்களிலிருந்து இவ்வாறு வெளியாகும் அலைகள் அனைத்தும் உடலில் சுழன்று கொண்டே இருக்கின்றன.

பொதுவாக. எந்த ஆற்றல் சுழற்சி பெற்றாலும் திண்மை உடைய பகுதி மத்தியில் போய்ச் சேர்வதும், இலேசான பகுதி புறத்தே நிற்பதும் துல்லியச் சமதளச் சீர்மை (Specific Gravity) தத்துவம் ஆகும். இந்த இயல்பின்படி. ஜீவகாந்தத்தின் பெரும்பகுதி தனது சுழலியக்கத்தினால் உடலின் மையப் பகுதிக்கு வந்து சேருகிறது. அங்கு இறுகி. குறுகி அழுத்தம் பெற்று ஜீவகாந்த நிலைக்களமாக அமைகிறது. இதனைக் கருமையம் என்றும். ஆன்மா என்றும் வழங்குகிறோம்.

மனிதன் எந்தச் செயல் செய்தாலும் உடலில் ஓடிக் கொண்டிருக்கும். ஏற்படும் தாக்கங்கள் அனைத்தும் கருமையத்தில் போய்ச் சேருகின்றன. இந்த நிகழ்ச்சியை வினைப்பதிவு என்று கூறுகிறோம். பதிவு என்றால் இங்கு எழுதி விளக்கக் கூடியதோ. அல்லது புலன்களுக்கு எட்டும்படியாக அடையாளம் கொடுக்கக் கூடியதோ அன்று.

கருமையத்தில் இறுகிக் குறுகி. நிலை பெற்றிருக்கும் ஜீவ்காந்த அழுத்தம் ஒவ்வொரு செயல் அல்லது அனுபோக அனுபவங்களுக்கும் ஏற்ப. தரமாற்றம் பெற்றுக் கொண்டே இருக்கிறது. அப்படி மாற்றம் பெற்ற தன்மைகள் அதே மன அலைச் சுழல் மறுபடியும் வரும்போது. மூளையின் காந்த அலைகளால் விரித்துக் காட்டப்படுகிறது. அப்பொழுது உண்டாகும் அகக்காட்சியே எண்ணங்கள்.

இறைநிலைக்கும் மனநிலைக்கும் உள்ள தொடர்பை உணர வேண்டும் என்றால். அவற்றை உருவத்துக்கும். அதிலிருந்து தோன்றும் நிழலுக்கும் ஒப்பிடலாம். உருவத்தை விட்டு நிழல் பிரிவதே இல்லை. ஆனால். நிழலை [illegible] உருவத்தின் மீது படும் கோணத்திற்கு ஏற்ப. நிழலானது அளவில் மாறுபடும். அது போன்று மனிதமனம் இறைநிலையை விட்டு இயங்குவதே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணம் யாழ்.ஜொனியன்ஸ் அரை இறுதிக்கு தகுதி

வீ. டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் தொடர்ந்து 9 ஆண்டுகளாக நடத்தி வரும் சுற்றுப் போட்டியின் நான்காவது கால் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ்.ஜொனியன்ஸ அணி ஓல்ட் கோல்ஸ் அணியை 51 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

பூவா, தலையா நிகழ்வில் வெற்றிபெற்ற யாழ்.ஜொனியன்ஸ் அணி 37.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றன.

அன்புஜன் 73, நேசவர்மன் 16, றஜிதன் 22, சஜீவன் 14 ஓட்டங்களை பெற்றனர். பந்துவீச்சில் நிலக்ஸன் 3, சிறிகுகன் 5, நிரோஸன் ஒரு இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணி 29.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 147 ஓட்டங்களை பெற்றன. மதூஸன் 33, குகன் 18, கோபினாத் 12 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் அகிலன் 4, பிருந்தா , லவேந்திரா ஆகியோர் தலா ஒரு இலக்குகளையும் றஜிதன் 4 இலக்குளையும் கைப்பற்றினர்.

இப் போட்டியில் வெற்றிபெற்ற யாழ்.ஜொனியன்ஸ் அணி அடுத்த வார இறுதியில் பற்றீசியன்ஸ் அணியை அரையிறுதியில் எதிர் கொள்ளும். அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டியில்பல்கலைக்கழக அணியை எதிர் கொள்ளும். இப்போட்டியின் மூலம் தரவரிசை பட்டியலுக்கு யாழ. ஜொனியன்ஸ் அணிக்கு 8.49 புள்ளிகளையும் ஓல்ட்கோல்ஸ் அணி 2.47 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

## யங்கம்பன்ஸ் அணி வெற்றி




தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் யாழ்.மாவட்ட ரீதியான 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் 2ஆம் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கலைவாணி மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இவ் ஆட்டத்தில் இரு அணியும் தலா ஒரு கோல்களைப் போட்டு ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

போட்டியைத் தீர்மானிப்பதற்கு நடுவர் தண்ட உதை வழங்கினாா. இத் தண்ட உதையினை யங்கம்பன்ஸ் அணி மிகவும் சரியாகப் பயன்படுத்தி 3:1 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்ற லீக் சுற்றுக்குள் நுழைந்தது. (க)

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி



றெட்பானா பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான, மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியானது ஓகஸ்ட் மாதத்தில் இடம்பெறவுள்ளது.

வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் இரு மாவட்டங்களின் கழகங்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

இந்தச் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் றெட்பானா பாரதி விளையாட்டுக் கழகத்தில் நேரடியாக பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களை, பாரதி விளையாட்டுக் கழகத்தினரிடம் 0773160403 , 0772032609 ஆகிய தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுகொள்ள முடியும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

# அரியாலை சரஸ்வதி ச.ச.நிலைய கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

## அரையிறுதியில் இளவாலை ம.வி.கழகம்





அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 96 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட வவுனியா, மன்னார் அணிகளும் யாழ்.மாவட்டத்திலிருந்து 5 அணிகளும் பங்குபற்றிய லீக் முறையிலான கரப்பந்தாட்ட போட்டியில் மன்னாா சென்.மேரிஸ், யாழ். பல்கலைக் கழக, ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணிகளை வீழ்த்தி அரையிறுதிக்கு தெரிவாகியுள்ளது இளவாலை மத்தி விளையாட்டுக் கழகம். (க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணித் தலைவர் ஸ்தானத்திலிருந்து இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் மத்யூஸ்

## தொடரை வெல்லவும் வாய்ப்பு



பாகிஸ்தான் அணியின் பல்வேறு அழுத்தங்களினால் 35 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து சரிவை நோக்கி சென்று கொண்டிருந்த இலங்கை அணியை, அஞ்சலோ மத்யூஸ் மீண்டுமொரு தடவை தனது மத்திய வரிசை துடுப்பாட்டம் மூலம் அணியின் துடுப்பாட்டத்தை மீளக் கட்டியெழுப்ப,

இலங்கை அணி 5 விக்கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில் 291 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளதுடன், வெற்றி பெறுவதற்கான வாய்ப்பையும் உருவாக்கியுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றுகிறது.

இத்தொடரின் முதலிரு போட்டிகளின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றுள்ள நிலையில்,

இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கடந்த 4ஆம் திகதி பல்லேகலேயில் ஆரம்பானது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸுக்காக திமுத் கருணாரட்ணவின் (130) சதத்தின் உதவியுடன் 278 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் 2ஆம் ஆட்ட நேர முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தொடர்ந்து நேற்றைய 3ஆவது நாளில் முதல் இன்னிங்ஸை தொடர்ந்த பாகிஸ்தான் அணி 215 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

துடுப்பாட்டத்தில் சப்ராஸ் அஹமட் ஆட்டமிழக்காமல் 78 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

இலங்கை அணியின் பந்து வீச்சில் நுவான் பிரதீப், தரிந்து கௌஷல், தம்மிக்க பிரசாத் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

63 ஓட்டங்கள் முன்னிலையில் தனது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி, ஒரு கட்டத்தில் 10.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 35 ஓட்டங்களை எடுத்து தடுமாறிய வேளையில், களம் நுழைந்த அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ் (77*) சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி அணியின் துடுப்பாட்டத்தை மீளக் கட்டியெழுப்பினார்.

இவரின் துடுப்பாட்டத்துக்கு உபுல் தரங்க (48), ஜெகான் முபராக் (35), டினேஸ் சண்டிமல் (39*) ஆகியோர் பங்களிப்புச் செய்ய மழை மற்றும் போதிய வெளிச்சமின்மை காரணமாக நேற்றைய 3 ஆம் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது,

இலங்கை அணி 2ஆவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 228 ஓட்டங்களை எடுத்துள்ளது.

இதன்மூலம் 5 விக்கெட்டுக்கள் வைசமிருக்கும் நிலையில் பாகிஸ்தான் அணியை விட 291 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

போட்டியின் 4ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## வழங்கவும் மாட்டேன்...

நேற்று மாலை கூடிய ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஜனாதிபதி இதனை உறுதிபடுத்தியதாக தெரிய வருகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 14 கட்சிகளின் தலைவர்கள் மற்றும் 58 நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கட்சியில் உள்ள பிளவுபாட்டை பயன்படுத்தி யார் வேட்புமனுவை வழங்க முயற்சித்தாலும் நான் அவருடன் தேர்தல் மேடைகளில் ஒன்றாக ஏறப்போவதில்லை.

எனவே வீண் முயற்சிகளை கைவிடுங்கள் மக்கள் எனக்கு வழங்கிய ஆணையின்படி அவர்கள் எதிர்பார்க்கும் நல்லாட்சியை அமைத்துக் கொடுப்பதே எனது நோக்கமாகும்.

அதைவிடுத்து நாட்டின் நலனை பாதிக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்காக வளைந்து போக முடியாது.

அவர்கள் எதிர்பார்க்கின்ற வகையில் எனது கட்சி வேட்பு மனுக்களை அவர்களுக்கு ஒருபோதும் வழங்காது என தெரிவித்துள்ளார். இதே வேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாற்று கட்சி ஒன்றின் ஊடாக தேர்தலில் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏதோவொரு வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் அவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படாது போனால், மாற்று கட்சியின் ஒன்றின் ஊடாக தேர்தலில் போட்டியிடுவதற்காக மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கி வரும் தரப்பினர் கொழும்பு விஜேராம மாவத்தையில் அலுவலகம் ஒன்றை திறந்துள்ளதாக கூறப்படுகிறது.

தேவை ஏற்படும் பட்சத்தில் தனித்து போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களையும் அவர்கள் தயார் செய்து வருவதாக அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன. (செ)

## மணவாளகோலமும் சங்காபிஷேகமும்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மடத்தடிவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஆலய மணவாளகோல விழாவும், சங்காபிஷேகமும் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்காபிஷேக நிகழ்வினைத் தொடர்ந்து வசந்த மண்டப பூஜை இடம்பெற்று சுவாமி திருவீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (எ)

# கண்ணீர் அஞ்சலி



அண்ணாவே!

முப்பத்திரண்டு ஆண்டுகளாக குருவாய், ஆசானாய், தந்தையாய், நண்பனாய் என்னோடு பழகினீர்கள். விழாக்களுக்கு சேர்ந்து செல்லும் பொழுது, அரசியல், தொழில்விடயங்கள், குடும்ப விடயங்கள் எல்லாவற்றையும் என்னிடம் பகிர்ந்து கொள்வீர்கள். தினமும் தொலைபேசியில் உரையாடுவீர்கள்

**வாடா மல்லிகை மலரை**

கொழும்பில் வெளியிடுவதற்கு யாருக்கெல்லாம் அழைப்பிதழ் கொடுக்க வேண்டும் என்று என்னோடு ஆலோசித்தீர்கள் வாடா மல்லிகை வாடிவிட இறைவன் ஏன் முடிவெடுத்தாரோ தெரியவில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

**நல்லையா ஈஸ்வரராஜா**

தொக்குவில். தொக்குவில்.

## மைத்திரிக்கு நான் எதிரி...

அவர்கள் எதிரிகளாக இருக்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது.

அந்த வகையில், 2005ஆம் ஆண்டு நான் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராகப் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றேன் என்பதற்காக நான், அவரை ஒருபோதும் எதிரியாகப் பார்த்தது இல்லை.

அதேபோன்று தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் ஜனாதிபதி தேர்தல் காலத்திலும் சரி, அதற்குப் பின்னரும் சரி நல்ல உறவைப் பேணி வருகின்றேன்.

தற்போதைய ஜனாதிபதியும், நானும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களாக பல தசாப்தங்களாக இருக்கின்றோம்.

இனிவரும் காலங்களிலும இவ்வாறே கட்சிக்குள் ஒற்றுமையாக இருவரும் இருப்பதையே நான் விரும்புகின்றேன்.

இதேவேளை நீங்கள் ஜனாதிபதியாக இருந்த போது, உங்களுக்கு கீழ் அமைச்சராகப் பணியாற்றியவரிடம், நீங்கள் பிரதமராகப் பணிபுரிவது கடினமாக இருக்காதா? என நீங்கள் என்னிடம் கேட்கின்றீர்கள்.

முன்னர் காணப்பட்ட பிரதமர் பதவிக்கும், 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்குப் பின்னரான பிரதமர் பதவிக்குமிடையில் வித்தியாசம் காணப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து பிரதமர் பதவியில் செயற்படுவதில் எவ்வித பிரச்சினையும் இருப்பதாக எனால உணர முடியவில்லை எனவும் மகிந்த தெரிவித்துள்ளார். (செ)

## மகிந்தவின்...

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

கட்சித் தலைமையினால் விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைய இந்த கூட்டம் இரத்து செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஒரே மேடையில் ஏறி கூட்டத்தை நடத்துவதற்கான தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

இதன் அடிப்படையிலேயே அனுராதபுரம் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராம சேவகர்கள்...

ருப்பதாக இது குறித்து கருத்து வெளியிட்ட முன்னாள் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூறியுள்ளார்.

இவர்கள் முன்னர் விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்ற காரணத்தைக் காட்டி புனர்வாழவு பயிற்சிக்கு அனுப்பப் பட்டிருப்பதாகவும் சிறிதரன் கூறினார்.

நீதிமன்ற உத்தரவின்றி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடைய கடிதம் மூலமான உத்தரவுக்கு அமைவாகவே இவர்கள் புனர்வாழ்வுப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும், அது நீதி நடைமுறைகளுக்கு முரணானது எனவும்சிறிதரன்குறிப்பிட்டார்.

புனர்வாழ்வுப் பயிற்சியின் பின்னர் இவர்கள் பணியில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள,ா இல்லையா என்பதும்தெளிவில்லாமல் உள்ளது என்றும் சிறிதரன் கூறினார். (செ-11)

## மகிந்தவின்...

அவர் பிரதமர் வேட்பாளராகவும் தேர்தலில் போட்டியிடும் அணிக்கு தலைமை தாங்கவும் வேட்பாளர்களை தெரிவு செய்யும் அதிகாரத்தையும் தேர்தல் நடவடிக்கைகளுக்கான பொறுப்பையும் கோரினார்.

அவரது இந்தக் கோரிக்கைகள் அனைதததும் நிராகரிக்கப்பட்டன.

இறுதியில்தனககு தேர்தலில் போட்டியிடுவதற்கு மட்டும் வாய்ப்பை தாருங்கள் எனக் கோரினார். அணியிடம் கேட்டு சொல்வதாக ஜனாதிபதி கூறினார்.

இரண்டு அணிகள் இருக்கின்றன. அது தனக்கு பிரச்சினையில்லை என்றும் சொன்னார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பக்கம் இருந்து பார்க்கும் போது இது முக்கியமானது. கட்சி ஐக்கியப்படுவதே இதற்கு காரணம்.

நாங்கள் ராஜபக்ஷவினருக்கு எதிராக செயற்பட்டவர்கள் என்பதால், அவர் எம்முடன் இருப்பது குறித்து பொது மக்களிடம் இருந்து எதிர்ப்பு ஏற்படும். இவை இரண்டிலும் யதார்த்தங்கள் உள்ளன.

ஒரு புறம் நல்லது என்கின்றனர் மறுபுறம் தவறு என்கின்றனர் என அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். (செ)

## காமினி...

வேண்டும் என்று பொலிஸார் கோரியிருந்தனர்.

இந்த கோரிக்கைக்கு இணங்க நீதிமன்றம் தமது ஒப்புதலை வழங்கியுள்ளது.

இதனையடுத்தே பொலிஸார்சட்டநடவடிக்கையை மேற்கொளள வுள்ளனர். (செ)


**உழவு இயந்திரம் உடன் தேவை!**

நல்ல நிலையில் உள்ள பாவித்த உழவு இயந்திரங்கள் தேவை

(Tractors - Tafe, Massey Ferguson 240)

உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 3575367 077 9086737

யாழ்ப்பாணம் வவுனியா கிளிநொச்சி





**உடனடி வேலைவாய்ப்பு**

உலகளாவிய ரீதியில் 10,000 கிளைகளைக் கொண்டிருக்கும் எமது **Multinational Company** க்கு இலங்கையில் அதன் வட மாகாண கிளைகளுக்கு பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர தொழில்
- அனுபவம் அவசியமற்றது.
- உணவு & தங்குமிட வசதிகள் உண்டு
- வயதெல்லை 18-30
- தகைமை O/L ( pass/ not pass)

(C-1432) தொடர்புகளுக்கு 0777981471 0773366453



**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532



**வேலைவாய்ப்புகள்**

புதியதோர் எதிர்காலத்தை நோக்கி...

எமது நிறுவனத்தின் புதிய கிளைகள் பரந்தன், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், நெல்லியடி, சுன்னாகம் ஆகிய பிரதேசங்களில் ஆரம்பிக்க இருப்பதால் O/L படித்துவிட்டு இருப்பவர்களுக்கு ஓர் அரியசந்தர்ப்பம்

- வயதெல்லை 18-35
- Earn 15,000- 18,000
- தங்குமிடம் & உணவு வசதிகள் இலவசம் (1051)

இன்றே தொடர்புகளுக்கு :- 0774458134 0767280492

[உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள்]



**CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062 (C-1489)



**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

**Spoken English with Grammar - Quick Learning Course** 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன் கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.

இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

**Diploma In English** 2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்

★ எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது

★ Excellent Teacher's Panel & Individual Attention

★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேந்தோர் குழவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள்
11.07.2015 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது

**Batches Starts On**

| | | |
|---|---|---|
| 06.07.2015@ 9.00 am | 11.07.2015@ 10.00 am | 09.07.2015@ 9.00 am |
| 08.07.2015@ 9.00 am | | 10.07.2015@ 9.00 am |

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road),
Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550

HotLine(S) 0777585913, 0777222422 0776555677



**Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**

விஷேட கட்டண சலுகைகள்

- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
021 753 8330, 0777 151 101 (C-1488)





**யாழ் மதர் கெயார் Dental Unit**

Reg.No.#PV85754

நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால் பல்லுக்கு கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல் உட்பட மற்றும் பல உயர்தர சேவைகள்.

- பல், வாய், வைத்திய சேவை (விசேடமாக வேரடைப்பு,பல் வெண்மையாக்கல்)
- பல், வாய், முகம் அறுவைச் சிகிச்சை (அண்ணப்பிளவு மற்றும் வாய், முக சீரமைப்பு)
- பல், வாய், முகம் சீரமைப்பு (ஒழுங்கற்ற, மிதப்புப் பற்கள் சீராக்கல்)

514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)

(C-1487) Tel : 021 221 9595, 021 221 9797, Mob : 077 220 2769







**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**

கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் நம்பகரமான சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). இலங்கையில் நாம் மட்டுமே அங்கிகரிக்கப் பட்ட CERTIFICATES & INTER NATIONAL DIPLOMAS! வழங்குகிறோம். மொழிபெயர்ப்புகள். ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). யாழ், வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் யுகு இல் படித்தே FRANCE, CANADA, SWITZERLAND, BELGIUM... செல்கிறார்கள்.

வகுப்பு ஆரம்பம் விரைவில். முற்கூட்டியே பதிவுசெய்யுங்கள்

021 222 8093 61இ கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

கச்சேரி → புகையிரதக்கடவை → AF or ஆரியகுளம், ஸ்ரான்லி றோட் → றக்கா றோட் → AF (990)





**V2 TRAVELS & TOURS அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்**

வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு (Srilankan Visa extension)/ வீசா எடுப்பதற்கான மாதிரி பயணச்சீட்டு (Travel Itinerary)

UK/CANADA/EUROPE போன்ற அனைத்து நாடுகளுக்குமான Visit visa/Spouse Visa/Tourist visa/Student visa/ Business visa போன்றவற்றிற்கான ஆலோசனைகள்,ஆவணத்தயார்ப்படுத்தல்கள் ONLINE விண்ணப்ப படிவங்கள் நிரப்புதல் மற்றும் நிராகரிக்கப்பட்ட(REFUSAL) விசாக்களுக்கு சட்டநிபுணர்களின் உதவியுடன் Appeal செய்து VISA பெற்றுக்கொடுத்தல்

இந்தியா, மலேசியா விசாக்கள் (Visa Services) / விமான ஆசனத்தினை பதிவு செய்தல்(Advanced Free Booking)

பயண திகதியினை மாற்றுதல் (Date change) / பயணக்காப்புறுதி (Travel Insurance) (C-1486)

ஞாயிற்றுக்கிழமை உட்பட அனைத்து நாட்களிலும் எமது அனைத்து கிளைகளும் இயங்கும்

| | | | |
|---|---|---|---|
| கிளிநொச்சி 0768226240 0768226244 | யாழ்ப்பாணம் 0212221984 0768226241 | நெல்லியடி 0776699892 0768226242 | வல்வெட்டித்துறை 0212055043 0776697960 |


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.